# நம்பிக்கை ஒளி
## Ray of Hope

நம்பிக்கை ஒளி
Ray of Hope

துவண்டோர் துயர் துடைத்து ஒளியேற்றுவோம்

January 2016 FREE NEWSPAPER இதழ் - 09



G05, Courtenay House, 10 Courtenay Road, East lane, Business Park, Middlesex, Wembley, HA9 7ND, UK
facebook.com/theroh.org www.theroh.org Email: roh@theroh.org Tel: (0044)2086179343 Mobile: 07853071088





# 2015 ஆம் ஆண்டு தாயகத்தில் 8,267,331.00 ரூபாய் (82 இலட்சத்து 67 ஆயிரத்து 331 ரூபாய்) பெறுமதியில் நம்பிக்கை ஒளியின் மகத்தான வேலைத்திட்டம்...!





07
நம்பிக்கை ஒளி நிறுவனத்தினால் 4 இலட்சத்து 68 ஆயிரம் ரூபாய் பெறுமதியான கல்வி ஊக்குவிப்பு உதவி..!



05
மனித உரிமைகளுக்கு மதிப்பளிக்க கோரி அரசுக்கு எதிராக...
தொடரும் ஆர்ப்பாட்டப் பேரணிகள்..!

02
படுகொலை நடந்து 31 ஆண்டுகள் கடந்தும் அபாயநிலையில் ஒதியமலை கிராமம்! (ஒரு நேரடி றிப்போட்)

08 வாழப் போராடும் தமிழ் அரசியல் கைதிகளின் குடும்பங்களும்: கண்டுகொள்ளாத அபிவிருத்தி திட்டங்களும்..!

11 எல்லையோரத்தில் கைவிடப்படும் அபாய நிலையில் 400 ஏக்கர் விவசாய நிலங்கள்: (நேரடி றிப்போட்)

# படுகொலை நடந்து 31 ஆண்டுகள் கடந்தும் அபாயநிலையில் ஒதியமலை கிராமம்! (ஒரு நேரடி றிப்போட்)







யுத்தம் முடிவடைந்து நல்லாட்சி, தேசிய அரசாங்கம் என என்னதான் நாம் பேசிக் கொண்டாலும் உண்மையான நல்லிணக்கம் ஏற்படாமல் ஆக்கிரப்பு பயத்தில் எல்லையோரத்தில் தமிழ் மக்கள் வாழும் ஒரு அவலநிலை இன்றும் தொடரவே செய்கிறது. ஆயுத ரீதியாக மேற்கொள்ளப்பட்ட ஆக்கிரமிப்பு யுத்தம் முடிவடைந்து 7 ஆண்டுகள் நெருங்குகின்ற நிலையிலும் அரச இயந்திரங்களின் துணையுடன் ஒரு அபகரிப்பு யுத்தம் அரங்கேறிக் கொண்டே இருக்கிறது. இந்த யுத்தம் வடக்கில் வவுனியா, முல்லைத்தீவு, மன்னார் என பரவலடைந்து இன்று யாழ்ப்பாணம் நாவற்குழி வரை சென்றுள்ளதை யாவரும் அறிவர்.

மெல்ல மெல்ல பறிபோகும் அபாயநிலையில் வவுனியா, முல்லைத்தீவு எல்லையோர கிராமங்கள் காணப்படுகின்றன. பதவியாவில் தோன்றிய குடியேற்றம் இன்று ஈசல் புற்றைப் போல் பரவலடைந்துள்ளது. அவ்வாறான ஒரு நெருக்கடிக்குள் இருக்கும் ஒரு பகுதியே ஒதியமலை.

ஒதியமலை என்பது தமிழர் வரலாற்றில் கறைபடிந்த ஒரு இடம். எவராலும் இலகுவில் மறந்துவிட முடியாத சம்பவம் அது. 1984 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் தமிழினத்திற்கு எதிராக ஒரு இனப்படுகொலை அரங்கேற்றப்பட்ட களமே அது. முல்லைத்தீவு மாவட்டத்தில் ஒட்டிசுட்டான் பிரதேச செயலகப் பிரிவில் அமைந்துள்ள ஒதியமலை வவுனியா முல்லைத்தீவுக்கான எல்லையோர கிராமம். அது மட்டுமல்லாது தமிழ் சிங்கள மக்களின் குடியேற்றங்களுக்கிடையிலான எல்லையோர கிராமம் கூட. பதவியா, கல்யாணபுர ஆகிய பகுதிகளில் நிலஅபகரிப்பு செய்து குடியேற்றங்களை உருவாக்கிய இராணுவம் படிப்படியாக இப்பகுதி மக்களையும் வெளியேற்றும் முயற்சியில் யுத்த காலத்தில் ஈடுபட்டிருந்தது. அதன் ஒரு கட்டமாகவே படுகொலை சம்பவமும் இடம்பெற்றிருந்தது.

1984 ஆம் ஆண்டு டிசம்பர் முதலாம் திகதி இரவு கல்யாணபுர பகுதியில் இருந்து இராணுவ சீருடையுடன் வந்தவர்கள் ஒதியமலைப்பகுதியில் பதுங்கி இருந்து விட்டு மறுநாள் இரண்டாம் திகதி அதிகாலை 6.10 மணியளவில் ஒதியமலைக் கிராமத்திற்குள் சென்று அங்குள்ள ஆண்கள், இளைஞர்களை சனசமூக நிலையத்திற்கு கூட்டம் ஒன்றுக்கு வருமாறு அழைத்திருந்தது.

ஏதும் அறியாத அப்பாவிப் பொதுமக்கள் காலையில் எழுந்தவுடனேயே கை, கால் முகம் கழுவியபவர்களும், தேனீர் அருந்தியவர்களும் என அரைகுறையாக தமது வேலைகளை முடித்து விட்டு சனசமூக நிலையத்திற்கு சென்றனர். அங்கு நின்ற இராணுவத்தினர் அங்கு சென்றவர்களின் வேட்டி, சாரங்களை களைந்து அவற்றினால் அவர்களின் கை, கால்களை கட்டிவிட்டு ஈவிரக்கமற்ற முறையில் அவர்களை சுட்டும் வெட்டியும் கொன்றது. தலையிலும், கண்ணிலுமாக சுடப்பட்டு படுகொலை அரங்கேறியது.

27 பேர் அவ்விடத்தில் மரணமடைய 5 பேரை இராணுவம் கல்யாணபுர நோக்கி இழுத்துச் சென்றிருந்தது. அவர்களும் பின்னர் கொல்லப்பட்டதாக அப்பகுதி மக்கள் கூறுகின்றனர்.

கே.கணபதிப்பிள்ளை, ரி.கணபதிப்பிள்ளை, ரி.காசிப்பிள்ளை, ரி.சுப்பிரமணியம், ரி.சிவஞானம், ரி.வேலுப்பிள்ளை, எஸ்.சண்முகம், எஸ். கேதீஸ்வரன், அ.தேவராஜா, சி.இராசு, பொ.தேவராசா, கி.பரமலிங்கம், கி.இராசலிங்கம், வீ.தில்லைநடராஜா, எஸ்.மோகன், வே.சந்திரன், க.தர்மலிங்கம், ந.நவரட்ணம், க.பொன்னம்பலம், க.கனகையா, நா.சின்னையா, கா.செல்வராசா, ச.சபாரத்தினம் உள்ளிட்ட அப்பகுதியைச் சேர்ந்த 32 அப்பாவி பொதுமக்கள் படுகொலை செய்யப்பட்டு அந்த கிராமமே சோகத்தில் முழ்கியது.



இப்படுகொலை நினைவாக அவர்கள் மரணமடைந்த இடத்தில் அமைக்கப்பட்டிருந்த நினைவுத்தூபி இறுதி யுத்தத்தின் பின்னர் திட்டமிட்டு அழிக்கப்பட்டுள்ள நிலையில், அப்படுகொலையின் 31 ஆவது ஆண்டு நினைவு நாள் கடந்த மாதம் 2 ஆம் திகதி ஒதியமலை பிள்ளையார் ஆலயத்தில் இடம்பெற்றது.

உறவுகளினால் உணர்வுபூர்வமாக அனுஸ்டிக்கப்பட்ட அந்த அஞ்சலி நிகழ்வில் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன், வடமாகாண சபை உறுப்பினர்களான ஜி.ரி.லிங்கநாதன், து.ரவிகரன் போன்றோரும் கலந்து கொண்டிருந்தனர்.

தொடர்ச்சி 6ஆம் பக்கத்தை பார்க்க....



# 2015 தாயகத்தில் 8,267,331.00 ரூபாய் (82 இலட்சத்து 67 ஆயிரத்து 331 ரூபாய்) பெறுமதியில் நம்பிக்கை ஒளியின் மகத்தான வேலைத்திட்டம்...!

2015ம் ஆண்டு தாயகத்தில் 82 இலட்சத்து 67 ஆயிரத்து 331 ரூபா பெறுமதியில் மகத்தான வேலைத்திட்டம்.

இலண்டனைத் தளமாகக் கொண்டு இயங்கும் நம்பிக்கை ஒளி தன்னார்வ தொண்டு நிறுவனம் அதன் இணை நிறுவனமாக தாயகத்தில் செயற்படும் இணைக்கும் இதயங்கள் அறக்கட்டளை ஊடாக கடந்த 2015ம் ஆண்டில் 82 இலட்சத்து 67 ஆயிரத்து 331 இலங்கை ரூபா செலவில் தாயக உறவுகளுக்கு உதவிக்கரம் நீட்டும் மகத்தான வேலைத்திட்டத்தை நடைமுறைச் சாத்தியமாக்கியுள்ளது.

முல்லைத்தீவு, கிளிநொச்சி, யாழ்ப்பாணம், வவுனியா, மன்னார், திருகோணமலை, மட்டக்களப்பு போன்ற மாவட்டங்களில் யுத்த வடுக்களுடன் வாழும் கணவனை இழந்த பெண்கள், பெற்றோரை இழந்த குழந்தைகள், அவயங்களை பறிகொடுத்தவர்கள், வறுமையில் சிக்கி பாடசாலைக் கல்வியை தொடரமுடியாத சிறுவர்கள், வாழ்நாள் முழுவரும் பராமரிக்க படவேண்டிய முள்ளந்தண்டு வடம் பாதிக்கப்பட்டவர்கள், போன்றவர்களுக்கு வாழ்வாதாரம், மருத்துவம், கல்வி, சுயதொழில் ஊக்குவிப்பு, விவசாயம், கடல் தொழில், கால்நடை வளர்ப்பு, குடிசைத் தொழில், ஆகியவற்றுக்காகவே குறித்த நிதி பயன்படுத்தப்பட்டது.

யுத்தத்தின் தாக்கத்தினால் பாதிக்கப்பட்ட தாயக உறவுகளுக்காக இலண்டனில் புலம் பெயர்ந்து வாழும் எமது உறவுகள் அங்கு பனியிலும், வெய்யிலிலும் கஷ்டப்பட்டு சிறுகச் சேகரிக்கப்பட்ட பணத்திலிருந்தே இந்த பாரிய வேலைத்திட்டங்கள் தாயகத்தில் அமுலாக்கப்பட்டு வருகின்றது.

அவ்வாறு அனுப்பப்படுகின்ற பணம் ஈழத்து உறவுகளின் நலனுக்காக நேர்த்தியான முறையில் திட்டமிடப்பட்டு தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது.
இவ்வாறு பல பரிணாமங்களின் பாதிக்கப்பட்ட மக்களின் தேவைகளை கருத்திற் கொண்டு திட்டமிடப்பட்டு தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளுக்கு உதவித்திட்டங்கள் வழங்கப்பட்டுள்ளது. இவ்வாறு வழங்கப்படும் உதவிகள் மூலம் பயனாளிகள் எவ்வளவு தூரம் பயனடைகின்றனர் என்பது தொடர்ச்சியாக கண்காணிக்கப்பட்டு தொழில் ஆலோசனைகளும், பயிற்சிகளும் வழங்கப்பட்டு வருகின்றது.

யுத்தம் முடிவடைந்து 5 வருடங்கள் பூர்த்தியானபிற்பாடு கூட தமிழ் மக்களின் அடிப்படை தேவைகள் பூர்த்தி செய்யப்படவில்லை இவ்வாறு அன்றாட வாழ்க்கைத் தேவைக்காக போராடும் தாயக உறவுகளில் அக்கறை கொண்ட புலம்பெயர் உறவுகளுக்கு நன்றிகளுடன் நம்பிக்கை ஒளி பத்திரிகை சிரம் தாழ்த்தி தலை வணங்குகின்றது.

மலர்ந்திருக்கும் 2016ம் ஆண்டு புதிய வருடத்தில் மேலும் நலிவுற்றிருக்கும் எமது தாயக உறவுகளுக்கு உதவிக்கரம் நீட்டும் மகத்தான வேவையில் இலண்டன் நம்பிக்கை ஒளி நிறுவனத்துடன் தொடர்ந்தும் இணைந்திருங்கள்.

## இராணுவத்தினருக்கு எதிராகவே அதிக முறைப்பாடுகள்..!





காணாமற்போனோரைக் கண்டறியும் ஜனாதிபதி ஆணைக்குழுவின் அமர்வில் நல்லூர் பிரதேச செயலகப் பிரிவில் சாட்சியமளித்தவர்களில் அதிகமானவர்கள், இராணுவமே தங்கள் உறவுகள் காணாமற் போவதற்கு காரணம் என சாட்சியமளித்துள்ளனர்.

காணாமற் போனோரைக் கண்டறியும் ஜனாதிபதி ஆணைக்குழுவில் நல்லூர் பிரதேச செயலகத்துக்குட்பட்ட 235 பேர் சாட்சியமளிக்கும் அமர்வு, யாழ்ப்பாணம் மாவட்டச் செயலகத்தில் ஆணைக்குழுவின் தலைவர் மெக்ஸ்வெல் பரணகம தலைமையில் ஒரே நேரத்தில் ஐந்து பேர் சாட்சியமளிக்கும் வகையில் கடந்த மாதம் 11 ஆம் திகதி நடைபெற்றது.

இந்த அமர்வில் அதிகளவானவர்கள் இராணுவத்தினரைக் குற்றஞ்சாட்டினர். இராணுவத்தினர் கைது செய்து காணாமற்போனமை, சுற்றிவளைப்பில் பிடிக்கப்பட்டு காணாமற்போனமை, இராணுவத்தினரால் பிடிக்கப்பட்டு காணாமற்போனோர் என அதிகமானவர்கள் சாட்சியங்களை பதிவு செய்தனர்.

ஒரு சில முறைப்பாடுகள் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியினர் (ஈபிடிபி) கடத்தியதாகவும் மேலும் சிலர் கடத்தியவர் யாரென்று தெரியாது என்றும் கூறினர். மேலும், இந்த அமர்வில் 43 பேர் புதிதாக சாட்சியமளிப்பதற்காக பதிவுகளை மேற்கொண்டனர்.



# முள்ளியான் காட்டுப் பகுதியில் யாழ்ப்பாண இராசதானி காலக் குடிமனையின் இடிபாடுகள் கண்டுபிடிப்பு!

கிளிநொச்சி மாவட்டத்திற்கு உட்பட்ட இயக்கச்சிக் கோட்டையில் இருந்து தென்கிழக்கே ஏழு கிலோமீற்றர் தொலைவில் உள்ள நித்தியவெட்டை, முள்ளியான் என அழைக்கப்படும் காட்டுப்பகுதியில் அழிவடைந்த புராதன வீடு ஒன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இப்பகுதியில் கள ஆய்வில் ஈடுபட்ட யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் தொல்லியற் சிறப்புக்கலை மாணவர்களுக்கு அவ்வூர் மக்கள் அங்குள்ள காட்டுப் பகுதியில் அழிவடைந்த அரண்மனை ஒன்று இருப்பதாகக் கூறப்பட்ட தகவலை அடுத்து அவ்விடத்திற்குச் சென்று தொல்லியல் ஆய்வினை மேற்கொண்டார்கள்.

இக்கட்டிட இடிபாடுகளை அவ்வூர் மக்களில் பலர் அரண்மனை எனவும், வேறுசிலர் இயக்கச்சி கோட்டையுடன் தொடர்புடைய சிறைக்கூடம் எனவும் அழைக்கின்றனர். ஆனால் கட்டிடத்தின் அமைப்பையும், அதன் காலத்தையும் நோக்கும் போது அது முன்பொரு காலத்தில் அங்கு வாழ்ந்த மக்களது வீடாக இருக்கலாம் என்பதை உறுதிப்படுத்த முடிகிறது. இவ்வீடு காட்டின் நடுவேயுள்ள பெரியகுளத்திற்கு அருகேயுள்ள உயர்ந்த மேட்டுநிலத்தில் செங்கட்டிகள், களிமண், சுதை என்பன கொண்டு கட்டப்பட்டுள்ளது. இரண்டு அறைகளைக் கொண்ட இக்கட்டடம் ஏறத்தாழ ஒன்பது மீற்றர் நீளமும், நான்கரை மீற்றர் அகலமும் கொண்டது.

இவ்வீட்டின் பின்பக்க அறைச் சுவரில் சிறிய யன்னல் ஒன்று இருந்தற்கான அடையாளம் காணப்படுகிறது. கட்டிடத்தின் பெரும்பாலான சுவர்கள் அழிவடைந்து விட்டாலும், கட்டடத்தின் மூன்று பக்க அத்திவாரங்களை தெளிவாகப் பார்க்க முடிகிறது.

கட்டிடத்தின் முன்பக்கம் அடர்ந்த காடாக இருப்பதால் அதன் அத்திவாரத்தை தற்போது அடையாளம் காணமுடியவில்லை. ஏனைய மூன்று அத்திவாரங்களில் இருந்தும் எழுப்பப்பட்ட சுவர்கள் ஒவ்வொன்றும் ஏறத்தாழ ஒருமீற்றர் தடிப்பைக் கொண்டன.

அதிலும் இரண்டு அறைகளைப் பிரித்து நிற்கும் நடுச் சுவரின் தடிப்பு ஏனைய அத்திவாரச் சுவர்களை விடச் சற்றுக் கூடுதலாகக் காணப்படுகிறது. பேராசிரியர் பொ.இரகுபதி சுவர்களின் தடிப்பை ஆதாரமாகக் காட்டி இக்கட்டிடம் இரு மாடிகளைக் கொண்ட வீடு எனக் குறிப்பிடுகிறார்.

இவ்வீட்டின் கூரை ஓடுகளைக் கொண்டு வேயப்பட்டதற்கான ஆதாரங்கள் எவையும் இதுவரை கிடைக்கவில்லை. இதனால் இதன் கூரைமரங்கள், பனை ஓலைகள் கொண்டு வேயப்பட்டிருக்கலாம் எனக் கருதலாம்.

இவ்வீட்டை அமைப்பதற்குப் பயன்படுத்தப்பட்ட செங்கட்டிகளின் அளவும், அவற்றின் தொழில் நுட்பமும் ஐரோப்பியர் ஆட்சியில் அறிமுகப்படுத்தப்பட்ட செங்கட்டிகளின் காலத்திற்கு முன்னர் பயன்படுத்தப்பட்ட காலத்தைச் சேர்ந்தவையாகக் காணப்படுகின்றன.

மேலும் இக்கட்டிட அழிபாடுகளிடையே இருந்து எடுக்கப்பட்ட மட்பாண்ட ஓடுகள், சுடுமண்ணால் செய்யப்பட்ட நீர்ப்பாசனக் குழாய்கள் என்பவற்றின் காலம் ஏறத்தாழ கி.பி. 15ஆம் நூற்றாண்டிற்கு முற்பட்டதாகக் காணப்படுகிறது. இவற்றை ஆதாரங்களாகக் கொண்டு இவ்வீடு அமைக்கப்பட்ட காலம் யாழ்ப்பாண அரசு காலம் அல்லது அதற்கு முந்திய காலத்தைச் சேர்ந்ததெனக் கூறமுடியும். ஆகவே வட இலங்கையில் இதுவரை கண்டுபிடிக்கப்பட்ட காலத்தால் முந்திய குடிமனையாக இதைக் கருத முடியும்.

வடஇலங்கையில் புராதன குடியிருப்புக்களைக் கொண்ட இடங்களில் வடமராட்சி கிழக்குப் பிரதேசமும் ஒன்றாகும். 1980களில் பேராசிரியர் இரகுபதியும், பின்னர் நானும் வெற்றிலைக்கேணி, உடுத்துறை, செம்பியன்பற்று, முள்ளியான், கட்டைக்காடு ஆகிய இடங்களில் மேற்கொண்ட ஆய்வுகளில் இவ்விடங்களில் இற்றைக்கு 2000 ஆண்டுகளுக்கு முன்னரே மக்கள் வாழ்ந்துள்ளனர் என்பதற்கான சான்றுகள் கிடைத்துள்ளன.

யாழ்ப்பாண அரசு காலத்தில் கடல்வழியாகவும், வன்னியில் இருந்து தரைவழியாகவும் கொண்டுவரப்பட்ட பொருட்களுக்கான வரி அறவிடும் கடவைகள் மேற்கூறப்பட்ட இடங்களில் இருந்ததற்கு வரலாற்று இலக்கியங்களில் ஆதாரங்கள் காணப்படுகின்றன.

ஆனால் போத்துக்கேயர், ஒல்லாந்தர் ஆட்சியைத் தொடர்ந்து இவ்விடங்களில் வாழ்ந்தமக்கள் படிப்படியாகப் பிற இடங்களுக்குச் சென்றதாக இவர்களின் ஆட்சிக்கால ஆவணங்கள் கூறுகின்றன.

ஆயினும் இவ்விடங்களில் இருந்து கடல் வழியாகவும், தரை வழியாகவும் பொருட்கள் கடத்தப்பட்டதால் அவற்றைத் தடுப்பதற்காகவே ஒல்லாந்தர் யாழ்ப்பாணத்தைக் காட்டிலும் அதிக எண்ணிக்கையிலான கோட்டைகளை இயக்கச்சி, ஆனையிறவு, வெற்றிலைக்கேணி போன்ற இடங்களிலும், கடற்கரையை அண்டிய இடங்களில் காவல் அரண்களையும் அமைத்தனர்.

இந்நிலையில் முள்ளியான் காட்டுப்பகுதியில் கண்டுபிடிக்கப்பட்ட கட்டிட இடிபாடுகள் ஐரோப்பியர் வருகைக்கு முன்னர் செறிவான தமிழர் குடியிருப்புக்கள் அங்கிருந்ததன் அடையாளமாகக் காணப்படுகிறது.

இது போன்ற வீடுகளின் சிதைவுகளும், பாழடைந்த



ஆலயங்களின் அழிபாடுகளும் இவ்வட்டாரத்தின் காட்டுப் பகுதிகளில் இருப்பதாக இப்போது தெரியவந்துள்ளது. எதிர்கால ஆய்வுகளால் அவை புதுவெளிச்சம் பெறலாம்.

**பேராசிரியர் ப.புஷ்பரட்ணம்**


**யாழ்ப்பாணப் பல்கலைக்கழக தொல்லியல் துறை**



2ஆம் பக்கத் தொடர்ச்சி

1984 ஆண்டு படுகொலையை அடுத்து அச்சம் காரணமாக அப்பகுதியை விட்டு வெளியேறிய மக்கள் 1987 ஆம் ஆண்டு மீண்டும் குடியமர்ந்தனர். யுத்தம், பதற்றம் என்பன தொடர்ந்ததால் மீண்டும் 1990 ஆம் ஆண்டு இடம்பெயர்ந்த அப்பகுதி மக்கள் பல்வேறு இடப்பெயர்வுகளையும், நெருக்கடிகளையும் சந்தித்து இறுதியாக 2010 ஆம் ஆண்டே நிரந்தரமாக மீள்குடியேறியுள்ளனர்.

விவசாயத்தை அடிப்படையாக கொண்டு 214 குடும்பங்கள் அன்று வாழ்ந்து வந்த நிலையில் தற்போது வெறும் 42 வரையிலான குடும்பங்களே மீள்குடியேறியுள்ளனர். இவ்வாறு பல குடும்பங்கள் இங்கு மீள்குடியேறாமைக்குரிய காரணம் என்ன என்பது ஆராயப்பட வேண்டியதொன்றே.



31 ஆண்டுகளுக்கு முன்பு நடந்த அந்த படுகொலை நினைவில் இருந்தும், அச்ச உணர்வில் இருந்தும் இப்பகுதி மக்கள் முழுமையாக விடுபடவில்லை. காரணம் அங்கு தற்போதும் ஒரு அபகரிப்பு யுத்தம் சத்தமில்லாமல் அரங்கேறிக் கொண்டிருக்கின்றது. சுமார் 15 கிலோமீற்றருக்கு அப்பால் இருந்த சிங்கள குடியேற்றங்கள் மெல்ல மெல்ல விரிவடைந்து இக் கிராமத்தில் இருந்து 3கிலோமீற்றர் தூரத்திற்குள் வந்துள்ளது.

வவுனியா வடக்கு பகுதியில், ஒதியமலைக்கு அண்மையில் அமைந்துள்ள தனிக்கல்லுப் பகுதி தமிழ் மக்களின் விவசாய நிலங்கள் கூட தற்போது சிங்கள குடியேற்றத்தின் வீதி அமைப்புக்காக அபகரிக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றது. தனிக்கல்லு, வின்னாங்கம்பிட்டி என்பன பறிபோகும் நிலையில் உள்ளது. ஹென்பாம், டொலர் பாம், ஆனந்தாபாம், சிலோன் ரியட்டர் என காணப்பட்ட குடியேற்றங்கள் தற்போது கல்யாண புரவை உருவாக்கி தமிழர் நிலத்தை விழுங்கிக் கொண்டிருக்கின்றது. இதனால் ஏற்பட்ட அச்சநிலை இப் பகுதியில் மக்கள் குடியேற்றத்தை கட்டுப்படுத்தியுள்ளது.

இதுதவிர, இப்பகுதியில் மீள்குடியேறிய மக்களுக்கு வீட்டுத் திட்டம் வழங்கப்பட்டுள்ள போதும் மின்சாரம் இன்னும் வழங்கப்படவில்லை. மின்சாரத்தூண்கள் சில பகுதியில் நிறுவப்பட்டுள்ளது. ஆனால் மின்சாரம் இன்னும் வரவில்லை என அப்பகுதி மக்கள் கூறுகின்றனர். இவற்றுடன் போக்குவரத்து வசதி, வீதிகள் என்பனவும் இன்றும் மிகவும் மோசமாகவே உள்ளது. ஆட்கள் அற்ற பகுதிகளிலும், குடியேற்றங்கள் இடம்பெறும் பகுதிகளிலும் வீதிகளை அமைத்து போக்குவரத்து வசதியை ஏற்படுத்திய அரசாங்கம் ஒரு பழமையான மக்கள் குடியிருப்புக்கான போக்குவரத்தை சீராக அமைக்க முன்வரவில்லை.

நெடுங்கேணியில் இருந்து சுமார் 10 கிலோ மீற்றர் தூரம் குன்றும் குழியும் நிறைந்த மோசமான பாதை வழியாகவே இப் பகுதி மக்கள் தமது வாழ்க்கைப் பயணத்தை மேற்கொள்கின்றனர். இங்கு பாடசாலை ஒன்று உள்ள போதும் அதற்கான அடிப்படை வசதிகள், ஆசிரியர் வளம் என்பன பற்றாக்குறையாகவே காணப்படுகின்றது. அதிபருடன் மட்டுமே பாடசாலை இயங்குவதால் பல மாணவர்கள் இங்கிருந்து பல கிலோமீற்றர் தூரத்தில் உள்ள பாடசாலைகளுக்குச் சென்றே கல்வி கற்று வருகின்றனர். இவ்வாறு ஒதிய மலை அபிவிருத்தியில் இருந்து புறக்கணிக்கப்படுவதற்கு காரணம் என்ன?

குடியேற்றத்தால் அச்சுறுத்தலுக்கு உள்ளாகி வரும் எல்லையோர கிராமத்திற்கான அபிவிருத்தி புறக்கணிப்பும், இப் பகுதி மக்களை இங்கிருந்து வெளியேற்றி நிலஅபகரிப்புக்கான ஒரு முயற்சியா என ஒதியமலை கிராம நிலமைகள் வெளிப்படுத்துகின்றது.

எனவே, தமிழ் மக்கள் பிரதிநிதிகள், வடமாகாண சபை இவ்விடயத்தில் கவனம் செலுத்தி ஒதியமலை கிராமத்தை அபிவிருத்தி செய்து மக்கள் வெளியேற்றத்தை தடுத்து அபகரிப்பு முயற்சியில் இருந்து பாதுகாக்க வேண்டும் என்பதே அனைவரதும் எதிர்பார்ப்பு.




## மனித உரிமைகளுக்கு மதிப்பளிக்க கோரி அரசுக்கு எதிராக

# வவுனியாவில் ஆர்ப்பாட்ட பேரணி..!

சர்வதேச மனித உரிமை தினத்தில் மனித உரிமைகளுக்கு மதிப்பளிக்க கோரி அரசுக்கு எதிராக வவுனியாவில் ஆர்ப்பாட்ட பேரணி ஒன்று இடம்பெற்றது.

வவுனியா பஸ்நிலையம் முன்பாக ஆர்ப்பாட்டம் இடம்பெற்றதுடன், வவுனியா நகரில் இருந்து வைரவபுளியங்குளம் வரை ஊர்வலமாகச் சென்றனர்.

ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் மனித உரிமைகளை வலியுறுத்தி முத்தையா மண்டபத்தில் மாநாடு ஒன்றும் நடைபெற்றது.

இந்த ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள், "அரசே காணாமல் போனோர் தொடர்பில் பதில் சொல், விடுதலை செய்! விடுதலை செய்! அரசியல் கைதிகளை விடுதலை செய்! இராணுவமே இராணுவமே வெளியேறு! காணிகளை விடுதலை செய்! மீள்குடியேற்றத்தை துரிதப்படுத்து, அரசே அரசே தமிழ் மக்களுக்கு நீதியைத் தா! தமிழ் மக்களின் இனப்பிரச்சனைக்கு சர்வசன வாக்கெடுப்பு நடத்து!" என பல சுலோகங்களை ஏந்தியிருந்தனர்.

காணாமல் போனோரை கண்டறியும் குழுவின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இந்நிகழ்வில், வன்னிப் பாராளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன், தமிழ் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சுரேஸ் பிறேமச்சந்திரன், தமிழ் தேசிய மக்கள் முன்னனியின் பொதுச் செயலாளர் செ.கஜேந்திரன், மாக்சிச லெனின் கட்சியின் தலைவர் செந்தில்வேல், ஜனநாயக மக்கள் முன்னனியின் ஊடாகப் பேச்சாளர் பாஸ்கரா மற்றும் வவுனியா மாவட்ட பிரஜைகள் குழு, நவசமாஜக்கட்சி, அரசியல் கைதிகளின் விடுதலைக்கான அமைப்பு, புதிய மாக்சிச லெனின் கட்சி, தமிழ் தேசியக் கூட்டமைப்பு, தமிழ் தேசிய மக்கள் முன்னனி ஆகிய கட்சி பிரமுகர்களும் கலந்து கொண்டனர்.




# திருமலையில் கடற்படைத் தளத்தில் நெஞ்சைப் பதற வைக்கும் இரகசிய சித்திரவதை முகாம்...!

திருமலை கடற்படைத் தளத்தில் இரகசிய தடுப்புக்காவல் சித்திரவதை முகாம் இருந்துள்ளது என்பதை இலங்கைக்கு விஜயத்தை மேற்கொண்ட பலவந்தமாக காணாமற்போகச் செய்யப்பட்டோர் தொடர்பான ஐ.நா பணிக்குழு உறுதிப்படுத்தியிருக்கின்றது.

குறிப்பிட்ட முகாமுக்கு நேரில் விஜயம் செய்து முகாம் எவ்வாறு, எப்போது செயற்பட்டது என்பதற்கான ஆதாரங்களையும் திரட்டி இந்தக் குழு வெளியிட்டிருப்பது இலங்கை அரசியல் வட்டாரங்களில் அதிர்ச்சியலைகளைத் தோற்றுவித்திருக்கின்றது. இந்த முகாம் தொடர்பில் முழு அளவிலான விசாரணைகள் முன்னெடுக்கப்படும் என அரசாங்கம் இப்போது உறுதியளித்திருக்கின்றது.

இலங்கையின் ஒரு பகுதியிலுள்ள இந்த முகாம் குறித்து அரசாங்கமே அறியாதிருந்த (?) நிலையில் வெளிநாட்டிலிருந்து வந்திருந்த ஐ.நா. குழு அதனைக் கண்டறிந்து உறுதிப்படுத்தியிருப்பது பல கேள்விகளை எழுப்பியிருக்கின்றது.

திருமலை முகாம் குறித்த தகவல்கள் முதலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரனால் தான் அம்பலப்படுத்தப்பட்டது. பாராளுமன்றத்தில் இது தொடர்பான தகவல்களை அவர் வெளிப்படுத்தினார். திருமலையில் இரகசிய தடுப்புக் காவல், சித்திரவதை முகாம் ஒன்று இருப்பதாக தகவல் கிடைத்திருப்பதாகத் தெரிவித்த அவர், அங்கிருந்து தப்பி வந்த ஒருவர் கொடுத்த தகவலின் அடிப்படையில் தான் இந்த விபரங்களை தான் வெளிப்படுத்துவதாகவும் சொல்லியிருந்தார்.

கடந்த பெப்ரவரி மாதத்தில் இந்தத் தகவல்கள் அவரால் வெளியிடப்பட்டிருந்தன. இது தொடர்பில் முழுமையான விசாரணை ஒன்று நடத்தப்படுமாக இருந்தால் தான் அதற்கு ஒத்துழைக்கத் தயாராக இருப்பதாகவும், சாட்சிகளின் பாதுகாப்புக்கு உத்தரவாதமளித்தால் அவற்றை வெளிப்படுத்தத் தயார் எனவும் சுரேஷ் பிரேமச்சந்திரன் அப்போது குறிப்பிட்டிருந்தார்.

இருந்தபோதிலும், அரச தரப்பு இதனைக் கணக்கில் எடுக்கவில்லை. கடத்தப்பட்டவர்கள், காணாமல் போனவர்கள் தடுத்து வைக்கப்பட்டுள்ள இரகசிய முகாம்கள் தொடர்பாக உரிய விசாரணைகள் எதுவுமே நடத்தப்படாமல் அவ்வாறான முகாம் இல்லை என பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அப்போது உடனடியாகவே பதிலளித்திருந்தார்.

இராணுவ, கடற்படைத் தளபதிகள் கூட இதனை மறுத்திருக்கின்றார்கள். முன்னாள் ஜனாதிபதி மற்றும் அமைச்சர்களின் ஊழல்களை விசாரிக்க குழுக்கள் அமைக்கப்பட்டன. இருந்தபோதிலும் இந்த முகாம்கள் தொடர்பில் தெரிவிக்கப்படும் குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் எந்தவிதமான விசாரணையையும் நடந்த அரசாங்கம் முன்வந்திருக்காத நிலையில் தான் ஐ.நா. நிபுணர் குழுவின் அறிக்கை இப்போது வெளிவந்திருக்கின்றது. அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருந்த தகவல்களை அரசாங்கம் ஏற்றுக்கொள்ளாவிட்டாலும் கூட, அது குறித்து விசாரிக்க தயாராகவிருப்பதாகத் தெரிவித்திருக்கின்றது.

ஐ.நா.குழுவே இரகசிய முகாமை உறுதிப்படுத்தியிருக்கும் நிலையில், இதனை ஒரேயடியாக மறுதலிக்கும் நிலையில் அரசாங்கம் இருக்கவில்லை என்பதும் தெரிகின்றது.

“கோட்டாபய” எனும் பெயர் கொண்ட இரகசிய தடுப்பு முகாம் திருமலையில் இருந்தது. அதில் 700 பேர் வரையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

தற்போது அவ்வாறான முகாம் இல்லாமல் இருக்கலாம். ஆனால் முன்னர் இருந்தது. இதற்கான சாட்சியங்கள் என்னிடம் உண்டு என அப்போது சுரேஷ் பிரேமச்சந்திரன் அப்போது தெரிவித்திருந்தார். சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்த தகவல்கள், இப்போது ஐ.நா. வெளியிட்டிருக்கும் அறிக்கை என்பவற்றைப் பார்க்கும் போது முக்கியமான கேள்விகள் எழுகின்றன. அந்த முகாமில் இருந்தவர்கள் யார்? அவர்கள் இப்பொழுது எங்கே? எதற்காக தடுத்து வைக்கப்பட்டு இருந்தார்கள்? என்ற கேள்விகளுக்குப் பதில் காண்பது அவசியம். இறுதிப்போரின் போது சரணடைந்து படையினரால் பஸ்களில் ஏற்றிச் செல்லப்பட்டு பின்னர் காணாமல்போனவர்கள் இங்கு தடுத்து வைக்கப்பட்டிருந்தார்களா போன்ற கேள்விகளுக்குப் பதில் காண்பது அவசியம்.

போர்க்காலத்திலும், போர் முடிவுக்கு வந்த பின்னரும் நாட்டின் பலபகுதிகளிலும் தடுப்பு முகாம்கள் அமைக்கப்பட்டிருந்தமை இரகசியமானதல்ல. இவற்றில் பெரும்பாலானவை சட்டரீதியான முகாம்கள். சட்டவிரோதமான இரகசிய தடுப்பு முகாம்கள் பலவும் பாதுகாப்புத் தரப்பினரால் நாட்டில் பல்வேறு பகுதிகளிலும் பயன்படுத்தப்பட்டு வந்ததாக மனித உரிமை அமைப்புக்கள் குற்றஞ்சாட்டியிருந்தன.

இந்தக் குற்றச்சாட்டை பாதுகாப்புத் தரப்பினரும் அரசாங்கமும் மறுதலித்தே வந்துள்ளார்கள். ஐ.நா. நிபுணர்குழு தற்போது வெளியிட்டிருக்கும் தகவல்கள் இந்த மறுதலிப்பை நிராகரிப்பதாக அமைந்திருக்கின்றது. ஐ.நா. வெளியிட்டுள்ள தகவல்கள் முழுமையானதல்ல. இந்தக்குற்றச்சாட்டுக்கள் உண்மை என்பதை ஐ.நா. உறுதிப்படுத்தியிருக்கின்றது. இது தொடர்பில் ஐ.நா. குழு வெளியிட்டிருக்கும் தகவலில், திருகோணமலை கடற்படை தளத்தில், நிலத்தடி இரகசிய தடுப்பு முகாமில் பெரும் எண்ணிக்கையானோர் நீண்டகாலம் தடுத்து வைத்து விசாரணை செய்யப்பட்டிருக்கலாம் என்று புரிந்து கொள்ள முடிகிறது.

இது உயர் மட்டங்களுக்கு தெரியப்படுத்தாமல் நடந்திருக்க வாய்ப்பு இல்லை. பலர் இறந்திருக்க கூடும் என நம்பப்படும் வகையில் மிகவும் பாரதூரமான விசாரணைகள் இங்கு நடைபெற்றிருக்கலாம் என்றே நாம் நம்புகின்றோம் எனத் தெரிவிக்கப்பட்டிருக்கின்றது.

பாதிக்கப்பட்டவர்கள் தெரிவித்த தகவல்களையடுத்தே ஐ.நா. குழு திருமலையில் முகாம் இருந்த பகுதிக்குச் சென்றிருக்கின்றது. நேரில் அவதானித்த தகவல்களின் அடிப்படையிலேயே தமது அறிக்கையை இந்தக் குழு வெளியிட்டிருக்கின்றது. ஒரு குறுகிய கால வியத்தையே ஐ.நா. குழு மேற்கொண்டிருந்தது. ஒரு விரிவான விசாரணையை அவர்கள் மேற்கொண்டிருக்கவில்லை. அவதானிப்புக்களை மட்டுமே அவர்கள் மேற்கொண்டிருந்தார்கள்.

திருமலை முகாம் போன்ற வேறு முகாம்களும் இருந்திருக்கலாம் என்ற கருத்தை வெளியிட்டுள்ள இந்தக் குழு, இவை தொடர்பான தகவல்களை அரசாங்கம் வெளிப்படுத்த வேண்டும் எனவும் கோரியுள்ளது.

இறுதிப்போரின் போது காணாமல் போனவர்கள் குறித்த தகவல்களைப் பெற்றுக்கொள்வதற்கு திருமலையில் கண்டுபிடிக்கப்பட்ட முகாம் ஒரு முக்கிய மைல்கல்லாக அமையலாம். ஐ.நா. குழு தெரிவித்திருக்கும் தகவல்களையிட்டு விசாரணை நடத்தப்படும் என அரசாங்கம் இப்போது தெரிவித்திருக்கின்றது. அடிப்படையான தகவல்களை ஐ.நா. குழு உறுதிப்படுத்தியிருக்கும் நிலையில் நம்பகத்தன்மையான ஒரு விசாரணையை இவ்விடயத்தில் அரசாங்கம் முன்னெடுக்குமா? அவ்வாறான விசாரணை ஒன்றை முன்னெடுப்பதன் மூலமாகவே பல உண்மைகளை வெளிக்கொணர முடியும் என்பதே எமது கருத்தாகும்.




# நம்பிக்கை ஒளி நிறுவனத்தினால் 4இலட்சத்து 68 ஆயிரம் ரூபாய் பெறுமதியில் கல்வி ஊக்குவிப்பு உதவிகள்..!

இலண்டன் நம்பிக்கை ஒளி தன்னார்வ தொண்டு நிறுவனத்தினால் மன்னார், மடுக்கரை அரசினர் தமிழ் கலவன் பாடசாலையில் கல்வி கற்கும் 250 மாணவர்களுக்கு 4இலட்சத்து 68 ஆயிரம் ரூபாய் பெறுமதியில் பாதணிகளும், புத்தகப் பைகளும் இலவசமாக வழங்கி வைக்கப்பட்டது.

யுத்தத்தில் பாதிக்கப்பட்ட மிகவும் பின்தங்கிய கிராமமே மடுக்கரை. இக் கிராமத்தில் அடிப்படை வசதிகள் எதுவும் இல்லாமல் இயங்கிக் கொண்டிருக்கும் மடுக்கரை அரசினர் தமிழ் கலவன் பாடசாலையில் கல்வி கற்கும் மாணவர்களின் கற்றல் செயற்பாட்டை ஊக்குவிக்கும் முகமாக இலண்டன் நம்பிக்கை ஒளி தன்னார்வத் தொண்டு நிறுவனத்தின் இணை நிறுவனமாக இலங்கையில் செயற்பட்டுவரும் இணைக்கும் இதயங்கள் அறக்கட்டளை ஊடாக 250 புத்தகப்பைகளும், 250 பாதணிகளும் வழங்கி வைக்கப்பட்டது. இந் நிகழ்வில் வன்னிப் பாராளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன், இணைக்கும் இதயங்கள் அறக்கட்டளையின் சேவையாளர்களாகிய ப.சுபாஸ்கரன், சி.சிவகாந்தன், கோ.ரூபகாந், பாடசாலை அதிபர், ஆசிரியர்கள் மற்றும் பெற்றோர்களும் கலந்து கொண்டு மடுக்க்ரைப் பகுதியில் வறுமையில் கல்வி கற்கும் மாணவர்களின் கல்வி செயற்பாட்டை ஊக்குவித்தனர்.






# வாழப் போராடும் தமிழ் அரசியல் கைதிகளின் குடும்பங்களும்: கண்டுகொள்ளாத அபிவிருத்தி திட்டங்களும்..!

யுத்தம் முடிவடைந்து 7 ஆண்டுகள் நெருங்குகின்றது. யுத்தத்தின் போது கைது செய்யப்பட்ட மற்றும் புனர்வாழ்வு அளிக்கப்பட்ட 12 ஆயிரம் வரையிலான முன்னாள் போராளிகள் சமூகத்துடன் இணைக்கப்பட்டு விட்டார்கள். ஆனால், விடுதலைப் புலிகளுக்கு ஆதரவு வழங்கியவர்கள், சாப்பாடு கொடுத்தவர்கள், சந்தேகத்தின் பேரில் கைது செயடயப்பட்டவர்கள் மற்றும் காணாமல் போனவர்கள் போன்றவர்களின் முடிவு தான் இன்று வரை விடை தெரியாத வினாக்களாக தொடர்கின்றன.

இந்நிலையில் நாட்டின் 14 சிறைச்சாலைகளிலும் இருந்த 217 தமிழ் அரசியல் கைதிகள் தம்மை பொது மன்னிப்பு அடிப்படையில் விடுதலை செய்ய வேண்டும் என தொடர் உணவு தவிர்ப்பு போராட்டத்தில் இரு கட்டங்களாக இருந்தனர். நல்லாட்சி ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன வழங்கிய வாக்குறுதியை அடுத்து முதலாவது கட்ட போராட்டம் கைவிடப்பட்டது. வழங்கப்பட்ட வாக்குறுதி நிறைவேற்றப்படாமையால் இரண்டாம் கட்டமாக உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதனையடுத்து சிலர் கடும் நிபந்தனையுடன் கூடியதானபிணையில் விடுதலை செய்யப்பட்டதுடன், 100 வரையிலான தமிழ் அரசியல் கைதிகளுக்கு புனர்வாழ்வு வழங்குவதாகவும், நீதிமன்றில் வழக்கு உள்ளவர்களின் வழக்கு விசாரணையை துரிதப்படுத்துவது எனவும் வழங்கப்பட்ட வாக்குறுதியையடுத்து போராட்டம் கைவிடப்பட்டது.

இவ்வாறு தமிழ் அரசியல் கைதிகள் தமது விடுதலைக்காக போராட அதற்கு வலுச் சேர்க்கும் வகையிலான போராட்டங்கள் வடக்கு, கிழக்கிலும் இடம்பெற்று வருகின்றது. அதன் ஒரு உச்சமாக யாழ் கொக்குவில் இந்து கல்லூரி மாணவன் செந்தூரன் (18 வயது) அரசியல் கைதிகளின் விடுதலையை வலியுறுத்தி புகையிரதம் முன் பாய்ந்து தற்கொலை செய்து கொண்டுள்ளார். இதற்கு பின்னரும் நல்லாட்சி என கூறும் அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுக்கப் போகிறது என்பது ஒரு புறம்மிருக்க, தமிழ் அரசியல் கைதிகளின் குடும்பங்கள் இன்று சமூகத்தில் நாளாந்தம் வாழ்வதற்கும், ஒரு வயிறு சோற்றுக்காகவும் போராடும் அவலநிலை தொடர்கிறது.

இது தொடர்பில் அரச அதிகாரிகளோ, மக்கள் பிரதிநிதிகளோ கவனம் செலுத்தியதாக இல்லை என்கின்றனர் பாதிக்கப்பட்டவர்கள். அந்தவகையில் தமிழ் அரசியல் கைதிகளின் குடும்பங்களின் இன்றைய அவலநிலையை வெளிப்படுத்தும் சில பதிவுகளே இவை....

### கூலி வேலை செய்து பிள்ளையுடன் வாழப் போராடும் குணநாதன் நிர்மலாதேவி

வவுனியா, கோவில் புளியங்குளம் பகுதியில் வசிப்பவர் குணநாதன் நிர்மலாதேவி. யுத்தத்தின் பாதிப்புக்களை நேரடியாக சுமந்த நிர்மலாதேவியின் குடும்பம் இறுதி யுத்தம் காரணமாக இடம்பெயர்ந்து, இறுதியில் இராணுவத்திடம் தஞ்சம் அடைந்து செட்டிகுளம் ஆனந்தகுமாரசாமி முகாமில் தங்கவைக்கப்பட்டனர்.

அங்கு வைத்து 2009 செப்ரெம்பர் 24 ஆம் திகதி நிர்மலாதேவியின் கணவன் கந்தையா குணநாதன் கைது செய்யப்பட்டார். அதன் போது தனது 7 வயது மகளுடன் முகாமில் தனிமையில் இருந்து விடுதலையாகி தற்போது கோவில்புளியங்குளம் பகுதியில் மீள்குடியேற்றம் செய்யப்பட்டுள்ளார். இவரது கணவன் இன்று வரை விடுதலை செய்யப்படாத நிலையில் அனுராதபுரம் சிறைச்சாலையில் தமிழ் அரசியல் கைதியாக தடுத்து வைக்கப்பட்டுள்ளார்.

மீள்குடியேறியவர்களுக்கு வழங்கப்பட்ட வீட்டுதிட்ட வீட்டில் அடிப்படை வசதிகள் அற்ற நிலையில் இன்று தரம் 9 இல் கல்விகற்கும் தனது மகளுடன் (வயது 14) வாழ்வதற்காக போராடுகிறது இந்த குடும்பம்.

குடும்பத்தை பார்க்க வேண்டிய கணவன் சிறையில், கையில் காயம் அடைந்து பெரிய வேலைகள் செய்ய முடியாத நிர்மலா தேவி தனது பிள்ளையின் படிப்புக்காகவும் சிறையில் இருக்கும் தனது கணவனை



சென்று பார்த்து வருவதற்காகவும் உழைக்க வேண்டிய கட்டாயத்திற்குள் தள்ளப்பட்டாள். நாள்ளாந்தம் கூலிவேலைக்குச் சென்று தன்னால் முடிந்ததை செய்து 500 ரூபாய் சம்பளம் பெற்று அதில் தனது சீவியத்தை போக்குகிறது இந்த குடும்பம். அக்கம், பக்கமெல்லம் வழங்கப்பட்டுள்ள மின்சாரம் இந்த குடும்பத்தின் வீட்டை மட்டும் இன்னும் எட்டிப் பார்க்கவில்லை. சமுர்த்தி தொடக்கம் அரசின் எந்தவொரு வாழ்வாத உதவிகளும் இந்த குடும்பதற்கு கிடைக்கவில்லை.

காரணம் என்ன என கண்ணீர் வீடுகின்றனர் நிர்மலாதேவியும், கையில் புத்தகமைப்பையுடன் நிற்கும் மகளும்.

### சிவலிங்கம் சேமமாலினியின் சோகமும், பிள்ளையின் ஏக்கமும்

மன்னார், மடு, இரணைஇலுப்பைக்குளம் பகுதியில் வசித்து வரும் சிவலிங்கம் சேமமாலினியின் குடும்பத்தின் சோகத்திற்கும் இன்று வரை முடிவில்லை. வன்னியின் வட்டக்கச்சிப் பகுதியில் குடியிருந்த சேமமாலினியின் குடும்பம் இறுதி யுத்தம் காரணமாக இடம்பெயர்ந்து முள்ளியவாய்க்கால், வட்டுவாகல் என நகர்ந்து ஓமந்தை ஊடாக இராணுவ பிரதேசத்திற்குள் வந்தார்கள். பிள்ளை பிறந்து ஒரு மாதமே ஆகியிருந்த நிலையில் 2009 மே 20 ஆம் திகதி சேமமாலினியின் கணவன் நல்லான் சிவலிங்கம் ஓமந்தையில் இராணுவத்திடம்

சரணடைந்தவர்கள் புனர்வாழ்வு அளிக்கப்பட்டு சமூகத்துடன் இணைக்கப்பட்டுவிட்டதாக கூறப்படும் நிலையில் சிவலிங்கம் மட்டும் இன்றும் தமிழ் அரசியல் கைதிகளின் வரிசையில் சிறையில் வாடுகிறார். அனுராதபுரம் மேல் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டு எந்தவொரு முடிவும் இன்றி கடந்த 6 வருடங்களைக் கடந்தும் இவரது வழக்கு மீதான விசாரணை தொடர்கிறது.

பிறந்து ஒரு மாதத்தில் தனது தந்தையை பறிகொடுத்த குழந்தை இன்று 6 வயது நிரம்பிய நிலையில் “அப்பா எப்ப வருவார், மைத்திரி மாமா அப்பாவை விடமாட்டடாரா... என்னை அப்பா எப்ப தூக்குவார்.. அப்பா தூக்கும் முன்பு நான் வளர்ந்து விடப்போறன்..” என தினமும் தாயிடம் கேட்டபடி



உள்ளார். சிறுமியின் கேள்விக்கு விடை சொல்ல முடியாத தாயார் தினமும் கண்ணீர் விட்டழுதபடி உள்ளார். இந்த சோகத்திற்குள் தோட்டம், கோழி வளர்ப்பு என தினமும் போராட்ட வாழ்க்கை நடத்தி தனது வாழ்வாதாரத்தை போக்குகிறார் சேம்மாலினி.

## வீண்போன தங்கமணியின்நம்பிக்கையும் தொடரும் சோகமும்

வவுனியா, நாகர்இலுப்பைக்குளத்தைச் சேந்தவர் சுப்பிரமணியம் தங்கமணி. யுத்தம் நடைபெற்ற காலப்பகுதியில் பல்வேறு இடம்பெயர்வுகளைச் சந்தித்திருந்த இருந்த இந்தக் குடும்பம் இராணுவ கட்டுப்பாட்டு பகுதியில் நீண்ட காலமாக வசித்தும் வந்தது. இந்நிலையில் கடந்த 2006 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் வீட்டில் இருந்து



வேலைக்காக சென்ற தங்கமணியின் மூத்த மகன் (அப்போது வயது 20) செட்டிகுளம் பொலிசாரால் சந்தேகத்தில் கைது செய்யப்பட்டார்.

இன்று 10 வருடங்கள் ஆகின்ற நிலையில் கூட குறித்த இளைஞன் விடுதலை செய்யப்படாது தொடர்ந்தும் தமிழ் அரசியல் கைதியாக தடுத்து வைக்கப்பட்டுள்ளார். அவனை எப்படியாவது விடுவிக்க வேண்டும் என வீட்டில் இருந்த பணம், நகைகள் எல்லாவற்றையும் முழுவதுமாக இழந்த நிலையில் இன்று ஒரு நேர வயிற்றுப் பசிக்காக நான்கு ஜீவன்கள் போராடிக் கொண்டிருக்கின்றன. மகன் பிடிபட்டதில் இருந்து மன ரீதியாக பாதிக்கப்பட்ட தந்தை இன்றும் பராமரிக்கப்பட வேண்டியவராகவே உள்ளார்.

தங்கமணியின் உடல் இயலாத தாயும் இன்று தங்கமணியின் குழந்தையாகவே உள்ளார். தங்கமணியின் மகள் வேலைக்கு போனால் தான் அந்த வீட்டு அடுப்படியில் வெளிச்சம் தெரியும் நிலையில் உள்ளது அவர்களது நிலமை. ஒரு நாள் வேலைக்கு செல்லவில்லை என்றால் அன்று இவர்கள் வீட்டில் உண்ணாவிரதம் தான்.

அரசாங்கம் வடக்கில் அபிவிருத்தி, பொருளாதார உதவி என கூறுகின்றது. ஆனால், பல அரசியல் கைதிகளின் வீடுகளில் தினமும் உண்ணாவிரதமே தொடர்கிறது. அப்படியாயின் அரச உதவிகள் யாருக்கு வழங்கப்பட்டது? ஜனாதிபதி பொது மன்னிப்பு வழங்கும் போது எனது மகன் வந்துவிடுவான் என நம்பியிருந்த தங்கமணியின் நம்பிக்கையும் வீண்போன நிலையில் அவர்களது வாழ்க்கைப் போராட்டம் தொடர்கிறது.

தமிழ் அரசியல் கைதிகளாக சிறையில் உள்ளவர்களின் சில குடும்பங்களின் பதிவே இவை.

இதுபோலவே இன்றும் பல தமிழ் அரசியல் கைதிகளின் குடும்பங்கள் வாழப் போராடிக் கொண்டிருக்கிறார்கள். முன்னைய அரசாங்கத்தின் காலத்தில் தமிழ் மக்களுக்கான பொருளாதார உதவிகள், அபிவிருத்திகள் பெரிதும் புறக்கணிக்கப்பட்டிருந்தது. ஆனால் தமிழ் பேசும் மக்களின் ஆதரவுடன் நிறுவப்பட்ட நல்லாட்சி அரசாங்கம் இன்று பொறுப்பேற்று ஒரு வருடங்கள் கடந்த நிலையில் கூட தமிழ் அரசியல் கைதிகளின் குடும்பங்களின் அவலம் தொடர்கிறது.

தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை என்பது ஒரு புறமிருக்க, அவர்களின் குடும்பங்கள் இன்று வாழ்வதற்கே நாளாந்தம் போராட வேண்டிய நிலையில் உள்ளது. சமுர்த்தி நிவாரணம், பொருளாதார சுயதொழில் உதவிகள் என அரசால் பலருக்கும் வழங்கப்பட்டு வருகின்ற நிலையில் தமிழ் அரசியல் கைதிகளின் குடும்பங்களுக்கு அவை வழங்கப்படாது புறக்கணிக்கப்படுவது ஏன்..? தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலைக்காக குரல் கொடுக்கும் மக்கள் பிரதிநிதிகள், வடமாகாண சபை அவர்களின் குடும்பங்கள் தொடர்பில் கவனம் செலுத்தாதது ஏன்..? அரசியல் கைதிகளின் குடும்பங்கள் திட்டமிட்டு புறக்கணிக்கப்படுகிறார்களா..? என பல வினாக்கள் அவர்களிடம் எழாமலும் இல்லை. தமிழ் அரசியல் கைதிகள் விடுதலை செய்யப்படவேண்டும் என்பதில் மாற்றுக்கருத்தில்லை. ஆனால், அவர்கள் விடுதலையாகி வரும் போது அவர்களை பார்க்க அவர்களது குடும்பங்கள் இங்கு இருக்க வேண்டும். அதற்காக அரசாங்கமும் மக்கள் பிரதிநிதிகளும் என்ன செய்யப் போகிறார்கள் என்பதே இப்போதுள்ள கேள்வி.

இற்றைக்கு 200 வருடங்கள் பழமை வாய்ந்த மன்னார், பள்ளிமுனை, புனித ”சென்லூசியா” தேவாலய, வருடாந்த பெருநாள் விழா, கடந்த மார்கழி மாதம் மன்னார் பள்ளிமுனையில் மிகவும் விமர்சையாகக் கொண்டாடப்பட்டது.

இதன் போது இலங்கையின் பல்வேறு பகுதிளிலும் இருந்து ஆயிரக்கணக்காண மக்கள் கலந்து கொண்டு தமது வழிபாடுகளையும், நேர்த்தி கடன்களையும் நிவர்த்தி செய்தனர்.

விசேடமாக புனித சென்லூசியா தேவாலையத்தில் அதிகமாக கண்களில் பார்வைக்குறைபாடு இருப்பவர்களின் குறைகளை தீர்த்து வைப்பதாக கத்தோலிக்க மதத்தவரின் நம்பிக்கை என்பதும் குறிப்பிடத்தக்கது.













# தாயகத்தில் கார்த்திகைப் பூவுக்கும் தடையா..?

யுத்தம் முடிவடைந்து 7 ஆண்டுகள் நெருங்குகின்ற நிலையில் கூட கார்த்திகை மாதம் வந்து விட்டால் வடக்கு, கிழக்கைப் பொறுத்தவரை, இராணுவத்தின் நெருக்குவாரங்கள் நிறைந்த மாதமாக அமைந்து விடுகின்றது. தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் பிறந்த நாள், விடுதலைப் புலிகள் அமைப்பில் இருந்து மரணித்தவர்களை நினைவு கூரும் மாவீரர் நாள் என்பன கார்த்திகை மாதத்தில் வருவதே அதற்கு காரணம். இது தவிர, கார்த்திகை மாதத்தில் மலரும் செங்காந்தள் மலரை வைத்திருப்பதற்கு கூட அஞ்சும் நிலையும் இன்றும் தொடர்கிறது. ஏன் கார்த்திகைப் பூவுக்கும் தடையா.?

ஜிம்பாவே நாட்டின்தேசிய மலராகவும், தமிழகத்தின் மாநில மலராகவும் உள்ள கார்த்திகைப் பூ விடுதலைப் புலிகளால் தமிழர் தேசத்தின் தேசிய மலராக பிரகடனப்படுத்தப்பட்டது.

விடுதலைப் புலிகளின் தேசியக் கொடியின் வர்ணங்களை கொண்டிருப்பதாலும், விடுதலைப் புலிகளின் தலைவர் பிறந்த மாதத்தில் பூத்து குலுங்குவதாலும், மாவீரர் நாளில் வடக்கு, கிழக்கு எங்கும் பூத்து காணப்படுவதாலும் இதனை புலிகளும் தமது தேசிய மலராக பிரகடனப்படுத்தினர். ஆனால் இலங்கையின் தேசிய மலராக அல்லியே விளங்குகின்றது.

இக் கார்த்திகைப் பூ அச்சம் கொள்ளும் வகையில் விடுதலைப் புலிகளால் உருவாக்கப்பட்டது அல்ல. அது நீண்டகால வரலாற்றையும் சிறந்த இயல்புகளையும் கொண்ட ஒரு மலர். கார்த்திகைப் பூவினை பண்டைத் தமிழ் இலக்கியங்களிலே காந்தள் என்றே அழைப்பர். ஒற்றை விதையிலைத் தாவரங்களில் வெங்காயக் குடும்பமாகிய லில்லி ஆசியே ∴ கோல்ச்சிசாசியியே எனப்படும் வகையினைத் சேர்ந்ததாகும்.

இக்கொடியின் தண்டு பசுமையானது. பலமில்லாதது. இலைகளின் நுனிகள் நீண்டு சுருண்டு பற்றுக்கம்பிகள் போல பக்கத்திலுள்ள மரஞ்செடி முதலிய ஆதாரங்களைப் பிடித்துக் கொண்டு இந்தத்தண்டு 10-20 அடி உயரம் வளரும். கிளை விட்டுப்படரும். ஆண்டுதோறும் புதிய கொடிகள் நிலத்தினுள்ளே இருக்கும் கிழங்கிலிருந்து வளரும். கிழங்கு சாதாரணமாக இரண்டு பிரிவுள்ளதாக இருக்கும். 6-12 அங்குல நீளமும், 1- 1.5 அங்குலத் தடிப்பும் உள்ளது. இது கலப்பை போலத் தோன்றுவதால் இதனைக் கலப்பை எனவும் அழைப்பர்.

காந்தள் மொட்டு காந்தள் கிழங்கின் ஒவ்வொரு பிரிவின் முனையிலும் புதிய கணு உண்டாகும். இலைகளுக்குக் காம்பில்லை எனலாம். 3அங்குலம் தொடக்கம் 6அங்குலம் வரையான நீளம், 0.75அங்குலம் தொடக்கம் 1.75அங்குலம் வரை அகலமிருக்கும். இலை அகன்ற அடியுள்ள ஈட்டி வடிவில், நுனி கூராக நீண்டு பற்றுக்கொம்பு போலச் சுருண்டிருக்கும்.

பூக்கள் பெரியவை. கிளைகளின் நுனியில் இலைகள் நெருங்கியிருப்பதால் சமதள மஞ்சரி போலத் தோன்றும். அகல் விளக்குப் போன்ற ஆறு இதழ் கொண்ட இப்பெரிய பூக்கள் (6-7 செ.மீ நீளம்) கார்த்திகைத் திங்களில் இம் மலர் முகிழ் விடுகின்றது. பூக்காம்பு 3-6 அங்குல நீளமிருக்கும். முனையில் வளைந்திருக்கும். 2.5அங்குல நீளம், 0.3- 0.5அங்குல அகலம் கொண்டதாகும். குறுகி நீண்டு ஓரங்கள் அலைபோல நெளிந்திருக்கும்.

தளை அவிழ்ந்த மலர் ஏழு நாட்கள் வாடாமல் இருக்கும். இதழ்களில் நிறம் முதலில் பச்சை, பிறகு வெண்மை கலந்த மஞ்சள், பிறகு மஞ்சள், பிறகு செம்மஞ்சள், பிறகு துலக்கமான சிவப்பு, நீலம் கலந்த சிவப்பாக மாறிக்கொண்டு போகும். 6 இதழ்கள் விரிந்து அகன்றோ, பின்னுக்கு மடங்கிக் கொண்டோ இருக்கும். கேசரங்கள் 6 அங்குலம், தாள் 1.5- 1.75அங்குலம், மரகதப்பை 0.5அங்குலம், முதுகொட்டியது. சூலகம் 3 அறையுள்ளது. சூல் தண்டு 2 அங்குலம். ஒரு புறம் மடங்கியிருக்கும்.

பூவின் நிறம் இருவேறாக மாறுபடுவதால் இதனை வெண்காந்தள், செங்காந்தள் என்ற இரு வேறு வகைகளாக வருணிப்பார்கள். கிழங்கு பிரிந்து கணுக்கள் உள்ளதை ஆண்காந்தள் என்றும் கணுக்களில்லாததை பெண்காந்தள் என்றும் குறிப்பிடுவர்.

கார்த்திகைச் செடியின் கிழங்கு ஆயுர்வேதம், யுனானி முறைகளில் பலவிதமாகப் பயன்படுகின்றது. இக்கிழங்கில் காணப்படும் நச்சுப்பொருளான கொல்சிசைனே வைத்திய முறைகளில் பயன்படுகின்றது. மேற்கு வைத்தியத்திலும் கொல்சிசைன் பயன்படுத்தப்படுகின்றது. ஆனால் இரு மருத்துவ முறைகளிலும் கொல்சிசைசின் பயன்பாடு வேறுபடுகின்றது. தோலைப்பற்றிய ஒட்டுண்ணி நோய்களுக்கு இதனைப் பயன்படுத்துவார்கள். தேள் கடிக்கும் இதனைப் இழைத்துப் போடுவதுண்டு. நேரடியாக இக்கிழங்கினை உட்கொள்ளின் நஞ்சாகும். சிறதளவு உட்கொண்டாலும் முடி உதிரும்.

கார்த்திகை திங்களில் முகிழ்விடும் இது செப்டம்பர் தொடக்கம் ஜனவரியிலும், மார்ச்சிலும் இலங்கை தவிர இந்தியா, சீனா, மலேசியா, மலாக்கா தீபகற்பம், அயனமண்டல ஆபிரிக்கா முதலான பகுதிகளிலும் காணப்படும். இதன் பூ தீச்சுவாலை போலக் காணப்படுவதால் அக்கினிசலம் எனப்படும். இதன் கிழங்கு கலப்பை வடிவமானதாக இருப்பதால் கலப்பை எனவும் இலாங்கிலி எனவும் அழைக்கப்படும். இலைகளின் முனை சுருண்டு காணப்படுவதால் தலைச்சுருளி என்றும் அழைக்கப்படும்.

அவற்றால் இது பற்றி ஏறுவதால் பற்றியென்றும் அழைக்கப்படும். அவ்வாறு வளைந்து பற்றுவதால் கோடல், கோடை என்று அழைக்கப்படும். கார்த்திகை மாதத்தில் மலர்வதால் கார்த்திகைப் பூ என்றும் அழைக்கப்படுகின்றது. மாரிகாலத்தில் முதலிலேயே வனப்பாய்த் தோன்றுவதால் தோன்றி என்றும் அழைக்கப்படும். சுதேச மருத்துவத்திலே இதனை வெண்தோண்டி எனவும் அழைப்பர். இவ்வாறு தமிழ்மொழியில் பலபெயர்களால் அழைக்கப்படும்.

கார்த்திகைச் செடியானது வேலிகளிலும், பாதையோரங்களிலும், காட்டோரங்களிலும் இக்கொடி படர்ந்து நிமிர்ந்து அழகிய விரல்கள் போலவும், சுடர்கள் போலவும் தோன்றும். “செங்காந்தள் ஐந்தன்ன விரலும் காட்டி” என இம்மலரை பெண்களின் விரலுக்கும் ஒப்பிடுகின்றனர்.

கார்த்திகைப் பூவினை ஏனைய மொழிகளில், சிங்களம்- நியன்கல, சமஸ்கிருதம்- லன்கலி, இந்தி- கரியாரி, மராட்டி- மெத்தொன்னி, தாவரவியற் பெயர்- லல்லி ஆசியே குளோறி லில்லி எனவும் அழைப்பர்.

இவ்வாறான சிறப்புக்களைக் கொண்டு தமிழர் பிரதேசங்களில் பூத்துக் குலுங்கும் கார்த்திகைப் பூ நாம் தொடுவதற்கோ, பார்ப்பதற்கோ அச்சம் கொள்ள வேண்டிய பூவல்ல. அது நீண்ட வரலாற்றுப் பாரம்பரியத்தைக் கொண்ட ஒரு பூ. ஏனைய பூக்களைப் போன்று நாமும் கார்த்திகைப் பூவை அச்சமின்றி பயன்படுத்தக் கூடிய ஒரு நிலை உருவாக வேண்டும் என்பதே அனைவரதும் எதிர்பார்ப்பு.







# எல்லையோரத்தில் கைவிடப்படும் அபாய நிலையில் 400 ஏக்கர் விவசாய நிலங்கள்: (நேரடி றிப்போட்)

யுத்தம் முடிவடைந்து ஏழு ஆண்டுகள் ஆகின்ற நிலையில் மீள்குடியேற்றம், துரித அபிவிருத்தி என வேகமாக நடைபெற்றுக் கொண்டிருப்பதாக அரசாங்கம் கூறுகின்றது.

ஆனால் அந்த அபிவிருத்தி எங்கு நடைபெறுகிறது?, யார் நன்மையடைகிறார்கள்? என்ற கேள்வி இன்று பலரிடமும் எழுந்துள்ளது. அவ்வாறான ஒரு கேள்வியுடன் தமது ஜீவனோபாயத்திற்காக நாளாந்தம் போராட்டம் நடத்தும் நிலையில் மக்கள் வாழும் ஒரு பகுதியே பட்டிக்குடியிருப்பு.

இது வவுனியா வடக்கு பிரதேச செயலாளர் பிரிவில் அமைந்துள்ள எல்லையோர கிராமங்களில் ஒன்று. இக் கிராமத்தில் இருந்து ஒரு சில கிலோமீற்றர் தூரத்திலேயே பறிபோன தமிழர் நிலங்களான சிலோன் ரியட்டர், டொலர் பாம், ஆனந்தா . பாம், ஓதியமலை என பல கிராமங்கள் உள்ளன.

பட்டிக்குடியிருப்பு கிராம அலுவலர் பிரிவில் வின்னாங்கம்பிட்டி, துவரங்குளம், பாகற்காய்குளம், பட்டிக்குடியிருப்பு, பள்ளம்புலவு, சேனப்பர் குளம், தனிக்கல்லு, குஞ்சுமாரி என பல கிராமங்கள் எல்லையோரத்தில் பறிபோகும் அபாயநிலையில் காணப்படுகின்ற போதும் பட்டிக்குடியிருப்பு, துவரங்குளம், பாகற்காய்குளம் ஆகிய கிராமங்களிலேயே மக்கள் மீள்குடியேற்றப்பட்டுள்ளனர்.

ஏனைய இடங்கள் தற்போதும் காடுகளாகவே காட்சியளிக்கின்றன. இப் பகுதியில் வாழும் மக்கள் தமது பிரதான தொழிலாக விவசாயம் செய்து வருகின்றார்கள். இவர்களது விவசாய காணிகள் பல மீள்குடியேற்றம் இடம்பெறாது காடுகளால் உள்ள பகுதிகளில் காணப்படுகின்றது.

பட்டிக்குடியிருப்பு கிராம அலுவலர் பிரிவில் வசிக்கும் மக்களின் விவசாய காணிகள் உள்ள ஒரு பகுதியே தனிக்கல்லு பகுதி. இவ்விவசாய நிலங்களுக்கு தேவையான நீரானது தனிக்கல்லு குளத்தில் இருந்தே பெறப்படுகின்றது.

ஆனால் அந்த குளத்தின் இன்றைய நிலை அப்பகுதி மக்கள் பலரை விவசாயத்தை கைவிடவே செய்துள்ளது. இப் பகுதி மக்களின் பொருளாதாரத்தில் முக்கிய இடம் வகித்த தனிக்கல்லு குளம் 1965 ஆம் ஆண்டு இறுதியாக புனரமைக்கப்பட்டதாக அப்பகுதி மக்கள் கூறுகின்றனர். அதன் பின் ஏற்பட்ட யுத்தம் காரணமாக இக்குளம் புனரமைக்கப்படவில்லை. 1983 ஆம் ஆண்டு ஏற்பட்ட ஒதியமலைப் படுகொலைச் சம்பவத்தையடுத்து இப்பகுதி மக்களும் இடம்பெயர்ந்திருந்த நிலையில் 2010 ஆம் ஆண்டே மீள்குடியேற்றப்பட்டனர்.

2010 ஆம் ஆண்டு இம் மக்கள் குடியேறிய போது இக்குளத்தின் கீழான வயல்நிலங்கள் பலவற்றை அருகில் உள்ள சிங்கள குடியேற்றத்தில் உள்ளவர்கள் தம்வசப்படுத்தி விவசாயம் செய்து கொண்டிருந்துள்ளனர். மக்கள் தமது ஆவணங்களை காட்டி போராடியதன் விளைவாக அக் காணிகள் தற்போது மக்களிடம் வந்துள்ளது. கடும் போராட்டங்களுக்கு மத்தியில் பாதுகாக்கும் நிலத்தில் கூட விவசாயம் செய்ய முடியாத நிலையே இங்கு காணப்படுகின்றது. தற்போது கூட இவ் வயல் காணிகளுக்கு ஊடாக புதிய பாதை ஒன்றை அமைத்து பொருளாதாரத்தை சிதைக்கும் முயற்சியில் பெரும்பான்மை இனத்தவர்கள் ஈடுபடுகின்றனர்.

தனிக்கல்லு குளத்தின் கீழ் ஏறத்தாழ 250 ஏக்கர் நீர்ப்பாய்ச்சல் காணிகளும், 150 ஏக்கர் மானாவாரி காணிகளும் காணப்படுகின்றன. 150 குடும்பங்களின் வாழ்வாதாரமும் இக்குளத்தையும், இவ் வயல் நிலங்களையும் நம்பியே உள்ளது. ஆனால் 1965 ஆம் ஆண்டுக்கு பின்னர் இந்தக் குளத்தின் புனரமைப்பு என்பது 50 வருடங்கள் கடந்தும் இன்று வரை எட்டாக்கனியாகவே இருந்து வந்துள்ளது.

யுத்த நடவடிக்கை காணமாகவும், இயற்கை மாற்றங்கள், யானைகளின் நடமாட்டங்கள் என்பன காரணமாக இக்குளத்தின் குளக்கட்டுப்பகுதி பல இடங்களில் சேதமடைந்துள்ளது. இப் பகுதியில் உள்ள விவசாயிகள் ஒன்று சேர்ந்து தமது மனித வலு மூலமே சிறு சிறு உடைவுகளையும், குளக்கட்டின் சேதங்களையும் அடைத்து நீரை இன்றுவரை பாதுகாத்து வருகின்றனர். இருப்பினும் இக் குளத்தில் 250 ஏக்கர் விவசாயத்திற்கும் தேவையான நீரினை தற்போது சேமிக்க முடியவில்லை என்பதே விவசாயிகளின் கவலை. இதனால் பலரது விவசாய காணிகள் தற்போது மானாவாரிகளாகவே மாறி வருகின்றது என்கின்றனர் விவசாயிகள். இக்குளத்தினை புனரமைக்குமாறு இப்பகுதி விவசாயிகள் மீள்குடியேற்றத்தின் பின்னர் தொடர்ச்சியாக கொடுத்து வந்த கோரிக்கைகளுக்கு அமைவாக இக்குளத் திருத்த வேலைகள் தொடர்பாக விவசாய திணைக்கள பொறியலாளர்களால் மதிப்பீடு செய்யப்பட்டு 10 மில்லியன் ரூபாய் தேவை என கணக்கிடப்பட்டது. இவ்வாறு 2012 ஆம் ஆண்டு மதிப்பீடு செய்யப்பட்ட போதும், அதற்கான நிதி ஒதுக்கப்பட்டதாக கூறப்பட்ட போதும் இன்று வரை இக்குளத்தில் எவ்வித புனரமைப்பு வேலைகளும் இடம்பெறவில்லை. அப்படியாயின் அந்த நிதிக்கு நடந்தது என்ன..? என்கின்றனர் இப் பகுதி கமக்கார அமைப்பினர்.

அதன்பின்னர் இப் பகுதி கமக்கார அமைப்பு இக்குளத்தை புனரமைத்து தருமாறு குளத்தின் பங்காளர்கள் 150 பேரின் கையொப்பங்களுடன் கூடிய கடிதம் ஒன்றினை கடந்த 2014 ஆம் ஆண்டு வடமாகாண விவசாய அமைச்சரிடம் கொடுத்த போதும் அக்கடிதத்திற்கான எந்தவித பதிலும் ஒரு வருடங்கள் கடந்துள்ள நிலையில் இன்றுவரை இல்லை என்கின்றனர் கமக்கார அமைப்பினர்.

தற்போது மாரிகாலம் தொடங்கியுள்ளமையால் பெய்கின்ற மழை நீரை கூட இக்குளத்தில் முழுமையாக சேமிக்க முடியாதளவு குளம் பாதிப்படைந்துள்ளது. தற்போது மானாவாரியாக விவசாயம் செய்யக் கூடியதாக இருந்தாலும், அடுத்து வரும் சிறு போக நெற்செய்கையை 250 ஏக்கர் காணியிலும் செய்ய முடியாத நிலையே ஏற்படும். இதனால் மீள்குடியேறியுள்ள பல குடும்பங்களின் பொருளாதாரம்?

இக்குளத்திற்கு அருகில் உள்ள தமிழ் கிராமங்கள் பல பறிபோகும் அபாய நிலையில் உள்ளது. இக் குளமும் புனரமைக்கபடாத நிலையில் உள்ளதால் விவசாய நிலங்களையும் கைவிட வேண்டிய அபாயநிலையே உருவாகும் என எச்சரிக்கின்றனர் விவசாயிகள்.

எனவே, இது தொடர்பில் வடமாகாண விவசாய அமைச்சர், மக்கள் பிரதிநிதிகள், அரச அதிகாரிகள் கவனம் செலுத்தி எமது நிலத்தையும், பொருளாதாரத்தையும் பாதுகாக்க உதவவேண்டும் என இப்பகுதி விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# 2 இலட்சம் வழங்கி சின்னத்துரையின் வாழ்வில் ஒளியேற்றிய இலண்டன் நம்பிக்கை ஒளியும், புலம்பெயர் உறவும்!

நெடுங்கேணி, சேனைப்புலவு கிராமத்தில் யுத்தத்தின் தாக்கதினால் பாதிக்கப்பட்டு கழுத்துக்கு கீழான பகுதி செயல் இழந்த நிலையில் வாழும் சிவப்பிரகாசம் சின்னத்துரை அன்றாடம் தனது மருத்துவ தேவைவையை பூர்த்தி செய்ய முடியாமல் திண்டாடிக் கொண்டிருக்கின்றார்.

2009ஆம் ஆண்டு காலப்பகுதியில் புதுக்குடியிருப்பு, சுதந்திரபுரத்தில் நடைபெற்ற யுத்தத்தின் போது ஷெல்வீச்சுக்கு இலக்காகி முள்ளந்தண்டு வடம் பாதிக்கப்பட்டது. அன்றிலிருந்து சின்னத்துரையின் நடமாடும் சுதந்திரம் பறிக்கப்பட்டது.
யுத்த வடுக்களோடு உறவினர்களின் உத்வியுடன் இடம் பெயர்ந்து முள்ளிவாய்க்கால் வரை சென்று



இராணுவக்கட்டுப்பாட்டுப் பகுதிக்கு கொண்டு செல்லப்பட்டு வவுனியா மருத்துவமனையில் சிகிச்சை பெற்றார்.

இருப்பினும் சிகிச்சை பலன் இன்றி எழுந்து நடக்கமுடியாத நிலையில் படுத்த படுக்கையானார் சின்னத்துரை. தொடர்ச்சியாக பராமரிக்க வேண்டிய நிலையில் இருந்த கணவனை தனிமையில் கைவிட்டுச் சென்றுவிட்டார் இவரின் மனைவி. இந்த சூழ்நிலையில் சின்னத்துரையின் வயது முதிர்ந்த தாயின் பராமரிப்பிலேயே செல்கின்றது இவரது சீவியம்.

இவருடைய மருத்துவ தேவைக்காக இலண்டன் நம்பிக்கை ஒளி தன்னார்வ தொண்டு நிறுவனம் கடந்த ஒரு வருட காலமாக மாதாந்தம் இரண்டாயிரத்து 500 ரூபாய் வாழ்வாதாரமாக வழங்கி வந்தது. இந்த பணம் சின்னத்துரையின் மருத்துவ தேவைக்கு போதியதாக இல்லை.

இவரின் அன்றாட வாழ்க்கைத் தேவையை தானே பூர்த்தி செய்து கொள்வதற்கும் நிரந்தர வருமானம் பெறுவதற்குமாக பலசரக்கு கடைக்கான கட்டடம் ஒன்று அரச சார்பற்ற நிறுவனம் ஒன்றினால் வழங்கப்பட்டுள்ளது. ஆனால் அவற்றுக்கு
தேவையான பொருட்களை கொள்வனவு செய்வதற்கு வசதியின்றி இருக்கும் சின்னத்துரைக்கு குறித்த கடைக்கு பொருட்களை கொள்வனவு செய்வதற்காக இரண்டு இலட்சம் இலங்கை ரூபாய் தேவைப்படுகின்றது என கடந்த மாதம் எமது "நம்பிக்கை ஒளி" பத்திரிகையின் மூலம் வாழ்வாதார உதவி கோரியிருந்தார்.

அதனைத் தொடர்ந்து இணைக்கும் இதயங்கள் அறக்கட்டளை சேவையாளர்கள் சின்னத்துரையின் வீட்டுக்குச் சென்று அவருடைய தற்போதைய நிலை தொடர்பாக தகவல் திரட்டி சின்னத்துரைக்கு வாழ்வாதார உதவி தேவைப்படுகின்றது என்று உறுதிப்படுத்திய அறிக்கையை இலண்டன் நம்பிக்கை ஒளி தன்னார்வ தொண்டு நிறுவனத்துக்கு அனும்பி வைத்தனர்.

இது தொடர்பாக நம்பிக்கை ஒளி நிர்வாக குழு உறுப்பினர்களின் கலந்துரையாடலைத் தொடர்ந்து சின்னத்துரையின் வாழ்வாதாரத்தையும், மருத்துவ தேவையையும் கவனத்தில் கொண்டு இரண்டு இலட்சம் ரூபாய் பெறுமதியில் பலசரக்கு கடை நடாத்துவதற்கான உதவி புலம்பெயர் உறவு ஒருவரின் நிதி உதவியுடனும், நம்பிக்கை ஒளியின் நிதிப் பங்களிப்புடனும் வழங்கப்பட்டது.

தொடர்ச்சியான கண்காணிப்பு மற்றும் மீளாய்வுகளின் பின்னர் சின்னத்துரையின் பலசரக்கு கடைக்கு தேவையான பொருட்களை வழங்கியும், கடை ஒழுங்கமைப்பதற்குரிய அனைத்து செயற்பாடுகளையும் இணைக்கும் இதயங்கள் அறக்கட்டளை சேவையாளர்கள் முன்னின்று செயற்பட்டு இருட்டில் கடந்த செல்லத்துரையை வெளிச்சத்துக்கு கொண்டு வந்து அவரின் வாழ்வில் நம்பிக்கை ஒளி ஏற்றி வைத்தனர்.

குறித்த கடை மூலம் செல்லத்துரைக்கு நாளாந்தம் 10,000 ரூபாய் தொடக்கம் 15,000 ரூபாய் வரை வியாபாரம் நடைபெற்று வருகின்றது. இவற்றின் மூலம் சின்னத்துரைக்கு நாளாந்தம் 2,000 தொடக்கம் 2,500 வரை இலாபம் கிடைப்பதாக தெரிவித்தார்.

**இந்த உதவி தொடர்பாக சின்னத்துரை தெரிவிக்கையில்....**

யுத்தத்தில் பாதிக்கப்பட்டு கழுத்துக்கு கீழ் இயங்க முடியாத நிலையில் எனது மனைவி என்னை பராமரிக்க முடியாமல் தனிமையில் விட்டுச் சென்று விட்ட நிலையில் எனது அம்மா தான் என்னை பராமரித்து வருகின்றார். துணைவியின் துணையின்றி இருந்த எனக்கு, மருத்துவ தேவையைக் கூட நிவர்த்தி செய்ய முடியாமல் இருந்தேன். இவ்வேளை, இலண்டன் நம்பிக்கை ஒளி தன்னார்வ தொண்டு நிறுவனத்தின் தொடர்பு கிடைத்தது. அவர்கள் எனது மருத்துவ தேவைக்காக மாதாந்தம் இரண்டாயிரத்து 500 ரூபாய் வீதம் கடந்த ஒரு வருடகாலமாக தொடர்ச்சியாக வழங்கி வந்தனர்.

இந்த சிறிய தொகை எனது மருத்துவ தேவைக்கு போதாமல் இருந்ததை நம்பிக்கை ஒளிக்கு தெரியப்படுத்தினேன். எனது சொந்த உழைப்பில் வாழவேண்டும் அதற்கு வாழ்வாதார உதவி செய்யுங்கள் என்று கேட்டிந்தேன்.

அதன்பின்னர் பல முறை இணைக்கும் இதயங்கள் அறக்கட்டளையினர் வீட்டுக்கு வந்து எனது நிலையை அறிந்து, தற்போது இலண்டன் நம்பிக்கை ஒளி நிறுவனத்தின் ஊடாக இரண்டு இலட்சம் ரூபாய் உதவி செய்து, பலசரக்கு கடை ஒன்று நடாத்துவதற்கு உதவி செய்துள்ளனர்.

இந்த உதவியை எனது வாழ்நாள் முழுவதும் மறக்க முடியாது. இந்த உதவியை வழங்கிய இலண்டன் நம்பிக்கை ஒளி நிறுவனத்துக்கும், இணைக்கும் இதயங்கள் அறக்கட்டளைக்கும், புலம்பெயர்ந்து வாழும் உறவுக்கும் எனது மனமார்ந்த நன்றிகளை தெரிவித்து கொள்கின்றேன் என்று கூறி கண்கலங்கினார் சின்னத்துரை.












# போரினால் பாதிக்கப்பட்டு வறுமையுடன் கல்வி கற்கும் மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள்....

இலண்டன் நம்பிக்கை ஒளி தன்னார்வ தொண்டு நிறுவனம் அதன் இணை நிறுவனமாக தாயகத்தில் இயங்கும் இணைக்கும் இதயங்கள் அறக்கட்டளை ஊடாக போரினால் பாதிக்கப்பட்ட நிலையில் வறுமையுடன் கல்வி கற்கும் 20 மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கி வைக்கப்பட்டது.

வவுனியா, கல்நாட்டியகுளம் கிராம சேவையாளர் பிரிவில், யுத்தத்தில் பாதிக்கப்பட்டு பல்வேறு நலன்புரி நிலையங்களில் தங்கவைக்கப்பட்டு இறுதியாக மதுராநகர் கிராமம் உருவாக்கப்பட்டு, அங்கு குடியமர்த்தப்பட்ட நிலையில் வறுமைக்கோட்டுக்கு கீழ் வாழ்ந்து வரும் தெரிவு செய்யப்பட்ட 20 மாணவர்களுக்கே இக்கற்றல் உபகரணங்கள் வழங்கி வைக்கப்பட்டது.

இந் நிகழ்வில் இணைக்கும் இதயங்கள் அறக்கட்டளையின் உப தலைவர் பாலமுரளிதரன், இணைக்கும் இதயங்கள் அறக்கட்டளையின் சேவையாளர்களான கோ.ரூபகாந், பிரதீபன், சிறுவர்களின் பெற்றோர்கள், கிராம அபிவிருத்தி சங்கத்தினர், மற்றும் மதுராநகர் பாடசாலை ஆசிரியர்கள் உட்பட பலரும் கலந்து கொண்டு வறிய மாணவர்களின் கல்வித் தரத்தை மேம்படுத்தும் நோக்குடன் மாணவர்களுக்கான பாதணிகள், அப்பியாசக் கொப்பிகள் மற்றும் எழுது கருவிகள் போன்ற கற்றல் உபகரணங்களை வழங்கி வைத்தனர்.




## யாழ்ப்பாணத்தில் இன்னும் 12 ஆயிரத்து 181 குடும்பங்கள் மீள்குடியேற்றப்படாத நிலையில்....

யாழ்ப்பாணத்தில் இன்னும் 12 ஆயிரத்து 181 குடும்பங்கள் மீள்குடியேற்றப்பட வேண்டியுள்ளதாக மாவட்ட செயலக புள்ளிவிபர தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதற்கமைய 10 ஆயிரத்து 716 தமிழ் குடும்பங்களும், ஆயிரத்து 465 முஸ்லிம் குடும்பங்களும் மீள்குடியேற்றப்பட வேண்டியுள்ளதாக அந்த தகவல்கள் தெரிவிக்கின்றன.

மீள்குடியேற்றப்படவேண்டிய 10 ஆயிரத்து 716 தமிழ் குடும்பங்களில் ஆயிரத்து 318 குடும்பங்கள் முகாம்களில் வாழ்ந்து வருகின்றனர்.

இதன்படி உடுவில் பிரதேச செயலாளர் பிரிவில் 9 முகாம்களில் 1369 பேரும், தெல்லிப்பளை பிரதேச செயலாளர் பிரிவில் 6 முகாம்களில் 1504 பேரும், கோப்பாய் பிரதேச செயலாளர் பிரிவில் 5 முகாம்களில் 895 பேரும், சண்டிலிப்பாய் பிரதேச செயலாளர் பிரிவில் 3 முகாம்களில் 102 பேரும், நல்லூர் பிரதேச செயலாளர் பிரிவில் ஒரு முகாமில் 22 பேரும், கரவெட்டி பிரதேச செயலாளர் பிரிவில் ஒரு முகாமில் 54 பேரும், பருத்தித்துறை பிரதேச செயலாளர் பிரிவில் 7 முகாம்களில் 791 பேரும் வாழ்ந்து வருவதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.



## துணுக்காய் பிரதேசத்தில் ஆறாயிரத்து 665 ஏக்கர் நிலப்பரப்பில் காலபோக நெற் செய்கை....

முல்லைத்தீவு, துணுக்காய் பிரதேசத்தில் ஆறாயிரத்து 665 ஏக்கர் நிலப்பரப்பில் இவ்வாண்டு காலபோக நெற் செய்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக கமநல அபிவிருத்தித் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதற்கிணங்க, முல்லைத்தீவு மாவட்டத்தின் பாரிய நீர்ப்பாசனக் குளங்களில் ஒன்றான வவுனிக் குளத்தின் துணுக்காய் கமநல சேவை நிலையத்தின் கீழ் உள்ள வலது கரைப்பகுதியில் 2,014 ஏக்கர் நிலப்பரப்பிலும், துணுக்காய் பிரதேசத்தில் காணப்படும் 9 நடுத்தரக்குளங்களின் கீழ் 3,473 ஏக்கர் நிலப்பரப்பிலும், 15 வரையான சிறிய குளங்களின் கீழ் 892 ஏக்கர் நிலப்பரப்பிலும், 286 ஏக்கர் மானாவாரிப் பயிர் செய்கை நிலப்பரப்பிலுமாக மொத்தம் 6,665 ஏக்கர் நிலபபரப்பில் காலபோக நெற் செய்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

மேலும், வவுனிக் குளத்தின் கீழ் 2,014 ஏக்கரும் மல்லாவிக்குளம், தேறாங்கண்டல் குளம், ஐயன்குளம், மருதன்குளம், தென்னிந்தியங்குளம், கல்விளான்குளம், கோட்டைகட்டியகுளம், அம்பலப்பெருமாள் குளம், பழையமுறிகண்டிக்குளம் ஆகிய 9 நடுத்தரக் குளங்களின் கீழ் 3,473 ஏக்கரும், முருங்கன் குளம், துணுக்காய் குளம், கரம்பைக்குளம், ஆலங்குளம், உயிலங்குளம், வேட்டையடைப்புக்குளம், பட்டங்கட்டிக்குளம், புத்துவெட்டுவான்குளம், மணல்குளம், புதுக்குளம், கீழ்க்குளம், அனுஞ்சியன்குளம், சொக்கன்குளம், குஞ்சுக்குளம், கொல்லன்குளம் ஆகிய 15 சிறிய குளங்களின் கீழ் 892 ஏக்கரிலும் மானாவாரி நிலங்களின் கீழ் 286 ஏக்கரிலும் மேற்படி பயிர் செய்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

# வட-கிழக்கு பகுதிகளிலும் இம் முறை சிறப்பான கிறிஸ்மஸ் பண்டிகை









## ஈழத்துச் சிதம்பரத்தில் தேர் உற்சவம்

ஈழத்துச் சிதம்பரம் என சிறப்பித்து அழைக்கப்படும் காரைநகர் சுந்தரேஸ்வரர் திருக்கோயிலின் (காரைநகர் சிவன் கோயில்) மார்கழித் தேர் "பஞ்சரத பவனி" வெகு சிறப்பாக இடம்பெற்றது.

யாழ். குடாநாட்டின் பல பகுதிகளில் இருந்தும் அதிகளவான பக்தர்கள் தேர் உற்சவத்தில் கலந்து கொண்டனர்.

இந்த கோயிலில் சிதம்பரம் தில்லை நடராசர் ஆலயத்தில் நடைபெறுவது போன்றே பெரும்பாலும் உற்சவங்கள் நடைபெறுவதால் இது "ஈழத்துச் சிதம்பரம்" என சிறப்பு பெற்றுள்ளது.

மார்கழி மாதத்தில் வரும் திருவாதிரை நாளிற்கு ஒன்பது நாட்கள் முதல் இவ் ஆலய திருவாதிரை விழா ஆரம்பமாகி, ஒன்பதாவது நாள் தேர் உற்சவமும், பத்தாவது நாள் திருவாதிரை அன்று தீர்த்தோற்ச விழாவும் நடைபெற்று நிறைவு பெறும். இங்கு பங்குனி, ஆடி, மார்கழி ஆகிய காலங்களில் வருடத்தில் மூன்று முறை திருவிழாக்கள் மிகச் சிறப்பாக நடைபெறும்.

ஈழத்துச் சிதம்பரத்தில் நடைபெறும் ஏனைய திருவிழாக்களை விட மார்கழி மாதத்தில் நடைபெறும் திருவாதிரை விழா (ஆதிரை விழா) மிகவும் சிறப்பு வாய்ந்தது என்பதும் குறிப்பிடத்தக்கது.







உலகளாவிய ரீதியில் கிறிஸ்மஸ் பண்டிகையைக் கொண்டாடிய அனைத்து மக்களுக்கும் நம்பிக்கை ஒளி தன்னார்வத் தொண்டு நிறுவனம் இனிய நத்தார் தின நல்வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கின்றது.

குழந்தை இஜேசு கிறிஸ்து பிறந்த இனிய நாளில் உலகெங்கும் வாழும் கிறிஸ்தவர்கள் அனைவருக்கும் சுபீட்சத்தையும், சமாதானத்தையும் கொண்டுவர இறைவனை பிரார்த்திக்கிறோம்.

நத்தார் பண்டிகையைக் கொண்டாடுவதற்காக இலங்கை உட்பட உலகம் வாழ் கிறிஸ்தவர்கள் தேவ ஆராதனைகளில் ஈடுபட்டிருந்தனர்.

இலங்கை முழுவதும் சகல கிறிஸ்தவ தேவாலயங்களிலும் விசேட திருப்பலி ஆராதனைகளில் பெருமளவிலான மக்கள் பங்குபற்றியிருந்தனர்.



கரோல் கீதங்கள் இசைக்க, கிறிஸ்தவ தேவாலயங்கள் தோறும் வழிபாடுகளுடன் முழு உலகுமே நத்தார் பண்டிகையை சிறப்பாக கொண்டாடியது.

அந்த வகையில் தமிழ் மக்கள் செறிந்து வாழும் வடக்கு, கிழக்குப் பகுதியிலும் இம் முறை கிறிஸ்மஸ் பண்டிகை மிகவும் சிறப்பாக கொண்டாடப்பட்டது.







# வாழ்வதற்காக போராடிய முன்னாள் போராளி குடும்பத்துக்கு இலண்டன் நம்பிக்கை ஒளியினால் ஒரு இலட்சம் ரூபாய் வாழ்வாதார உதவி..!

கிளிநொச்சி, பாரதிபுரம், 3/4 ஏக்கர் திட்டம் என்னும் கிராமத்தில் அன்றாடம் தமது வாழ்க்கைத் தேவைகளை கூட நிறைவேற்ற முடியாமல் வாழ்வதற்காக போராடிய குடும்பத்துக்கு இலண்டன் நம்பிக்கை ஒளி தன்னார்வத் தொண்டு நிறுவனத்தினால் ஒரு இலட்சம் ரூபா பெறுமதியான வாழ்வாதார உதவி வழங்கி வைக்கப்பட்டது.

யாழ்ப்பாணத்தை பிறப்பிடமாகக் கொண்ட சந்தானம் சசிக்குமார் 1988ம் ஆண்டு காலப்பகுதியிலிருந்தே தாயக விடுதலைப் போராட்டத்துக்காக தன்னை அற்பணித்துக் கொண்டார்.

இவருடைய வாழ்க்கையில் அனுபவித்த துன்பங்களை வார்த்தைகளால் கூற முடியாது. கடந்த மாத எமது நம்பிக்கை ஒளி பத்திரிகையில் இவருடைய குடும்பத்தின் வறுமை நிலை தொடர்பான முழுமையான விபரங்கள் பிரசுரிக்கப்பட்டிருந்தது.

இவர், 2010ஆம் ஆண்டு மீள்குடியேற்றப்பட்ட போது கொடுக்கப்பட்ட தற்காலிக கொட்டகையிலேயே இன்று வரை வாழ்ந்து வருகின்றார். யுத்த பாதிப்புக்களை உடலில் சுமந்திருக்கும் சசிக்குமாராலும் அவரது மனைவியாலும் கடின வேலைகள் எதுவும் செய்யமுடியாது. அன்றாடம் குடும்ப வறுமையை போக்குவதற்காக சசிக்குமாரின் மனைவி கோகிலவதனி கூலிவேலைக்குச் சென்று அதில் வரும் சிறிய வருமானத்தில் தான் எழுந்து நடக்க முடியாத நிலையில் இருக்கும் கணவனையும், பாடசாலையில் கல்விகற்கும் இரு பிள்ளைகளையும், கைக்குழந்தையையும் பராமரித்து வருகின்றார்.

1988ஆம் ஆண்டு காலப்பகுதியில் இருந்து தாயக விடுதலைக்காக போராடிய சசிக்குமாரின் குடும்ப வாழ்வாதாரத்தை கட்டியெழுப்புவதற்கு பலசரக்கு கடை ஒன்றை அமைத்து தரும்படி கடந்த மாதம் எமது நம்பிக்கை ஒளி பத்திரிகையின் மூலம் புலம் பெயர்ந்த உறவுகளிடம் உதவி கோரியிருந்தார்.

இவருடைய குடும்பத்தின் உண்மை நிலையை அறிந்த நம்பிக்கை ஒளி தன்னார்வ தொண்டு நிறுவனம் அதன் இணை நிறுவனமாக இலங்கையில் செயற்பட்டுவரும் இணைக்கும் இதயங்கள் அறக்கட்டளையூடாக சசிக்குமாரின் தற்போதைய நிலை தொடர்பாக நேரில் பார்வையிட்டு சசிக்குமாரின் குடும்பம் நிரந்தரமான வருமானத்தைப் பெற்றுக் கொள்வதற்காக ஒரு் இலட்சம் ரூபாய் பெறுமதியாக பொருட்களை கொள்வனவு செய்து, அதனை வழங்கி பலசரக்கு கடை ஒன்றை நடாத்துவதற்கான உதவி-களை செய்திருந்தது.

வீட்டின் மூலைக்குள் முடங்கிக் கிடந்த சசிக்குமாரை கடை ஒன்றின் உரிமையாளராக மாற்றி தற்போது நாள் ஒன்றுக்கு ஆயிரம் ரூபாய் தொடக்கம் ஆயிரத்து ஐந்நூறு ரூபாய் வரை வருமானமாகப் பெற்று தனது குடும்பச் செலவையும், பாடசாலையில் கல்வி பயிலும் பிள்ளைகளின் கல்விச் செலவையும் ஈடு செய்து மன நிறைவுடன் வாழ்ந்து வருகின்றார்.

**இந்த உதவி தொடர்பாக சந்தானம் சசிக்குமார் நம்பிக்கை ஒளி பத்திரிகைக்கு தெரிவிக்கையில்...**

யுத்தத்தில் பாதிக்கப்பட்ட என்னைப்போன்ற பலருக்கு வாழ்வாதார உதவிகளை வழங்கி வரும் இலண்டன் நம்பிக்கை ஒளி நிறுவனத்துக்கும், இந்த வேலைத்திட்டங்களை எங்களுக்கு கொண்டு வந்து சேர்க்கும் இணைக்கும் இதயங்கள் அறக்கட்டளைக்கும் நான் நன்றி கூற கடமைப்பட்டிருக்கின்றேன்.

கழுத்துக்கு கீழ் இயக்கம் எதுவும் இல்லாமல் இருப்பதை விட செத்துப் போவதே மேல் என்று பல முறை நினைத்திருக்கின்றேன். இந் நிலையில் எனது உணர்வுகளை மதித்து எனக்கு உதவிசெய்த இலண்டன் நம்பிக்கை ஒளி நிறுவனத்துக்கு எனது குடும்பம் சார்பாக நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இந்த மகத்தான உதவி மூலம் தற்போது எனது குடும்பத்தின் அன்றாடச் செலவுகளையும், பிள்ளைகளின் கல்வி செயற்பாடுகளையும் தொடர்ந்தும் மேற்கொள்ளக் கூடியதாக இருக்கின்றது. எனக்கு இந்த உதவியை வழங்கிய அனைவருக்கும் நன்றிகள் எனத் தெரிவித்தார் சசிக்குமார்.



















# யாழ் /தெல்லிப்பளை மகாஜனா கல்லூரியின் வரலாற்றுச் சுவடுகள்




இந்து சமுத்திரத்தின் முத்து எனப்படும் இலங்கைத் தீவில் வடபகுதியில் வரலாற்றுச் சிறப்பு மிக்க யாழ்ப்பாணத்தின் மண்ணிலே ஆயிரக்கணக்கான கல்வி மான்களையும், புத்திஜீவிகளையும், தொழில் வல்லுனர்களையும், விளையாட்டுத்துறை ஜாம்பவான்களையும் உலக அரங்கில் தலைநிமிர்ந்து மார்தட்டிக் கொள்ளும் அளவிற்கு கல்வியில் தன்னை உயர்த்தி நிற்கின்றது இம் மண்.

இம் மண்ணின் இயற்கை ஏழில் கொஞ்சும் தெல்லிப்பளை நகரில் கம்பீரத்துடன் காட்சி தருகின்றது மகாஜனாக் கல்லூரி. இக் கல்லூரி 100 ஆண்டுகளைக் கடந்து வெற்றிப் பாதையில் சாதனை படைத்து வருகின்றது.

ஆண்டுகள் தோறும் இக் கல்லூரியில் இருந்து கிட்டத்தட்ட 25 மாணவர்கள் வரை பல்கலைக்கழகத்துக்கு தகுதி பெறுகின்றனர்.

கடந்த 100 ஆண்டுகளில் மகாஜனாக் கல்லூரி உருவாக்கிய பட்டதாரிகள் ஏராளம்.

புகழ் பூத்த அறிஞர்கள், கல்விமான்கள், வைத்திய கலாநிதிகள், பொறியியலாளர்கள், கணக்காளர்கள், சட்டத்தரணிகள், அரசியல்துறை சார்ந்தவர்கள் எனப் பல்வேறு துறைகளிலும் முன்னிலை வகிக்கும் பலர் மகாஜனாக் கல்லூரியின் மாணவர்கள் என்பது பெருமைக்குரியதே.

இக் கல்லூரியில் பழமைவாய்நத நூலகம் ஒன்று அமையப்பெற்றுள்ளது. இந் நூலகத்தில் கலை, கலாசாரத்தை சுமந்த இலக்கிய சுவடுகள் அடங்கிய நூல்கள் பாதுகாத்து பராமரிக்கப்பட்டு வருகின்றது.

அத்துடன் பாடசாலை மாணவர்களின் அறிவுத்திறனை வளர்ப்பதற்கான கல்வி மற்றும் அறிவியல் சார்ந்த நூல்களும் ஏராளமாக உள்ளன.

அக்காலத்தில் ஈழத்தில் குறிப்பாக யாழ்ப்பாணத்தில் வெளிவந்த நூல்களும் இங்கு பேணிப்பாதுகாக்கப்பட்டு வருவது இதன் சிறப்பு. இங்கு கல்வி கற்கும் மாணவர்களிள் வாசிப்பு திறனை விருத்தி செய்யவும், அறிவைப் பெருக்கிக் கொள்ளவும், வரலாறுகளை அறிந்து கொள்ளவும் பெரிதும் துணை புரிகின்றது இந் நூலகம்.

இவ்வாறான நூலகம் ஒன்று அமையப் பெற்றது மகாஜனாக்கு கிடைத்த பொக்கிசம் என்றே கூறலாம். புலமைபரிசில் பெற்று ஜப்பான் வரை சென்று பயிற்சி பெறும் அளவிற்கு சாரணியத்துறையில் முனைப்புடன் செயற்பட்ட மாணவர்கள் சமூக சேவைகளிலும் அக்கறை காட்டினர்.

கலை இலக்கியத்துறையில் இக் கல்லூரிக்கு உள்ள தனிச்சிறப்பே பிரசித்தமானது. நாடகத்துறையில் அடுத்தடுத்து ஐந்து வருடங்கள் தொடர்ச்சியாக அகில இலங்கை ரீதியில் முதலாம் இடத்தைப் பெற்று சாதனை படைத்தது.

இதனால் பிரபல நாடுகளில் உள்ள பலரது பார்வையும் மகாஜனாவின் பக்கம் திரும்பியது. விளையாட்டுத் துறையிலும் எண்ணிலடங்கா சாதனைகளைப் படைத்துள்ளது.

உதைபந்தாட்டத்தில் யாழ் மாவட்ட முதன்மை அணியாக பல வருடங்கள் தொடர்ந்தும் இருந்து வந்த மகாஜனா அகில இலங்கை ரீதியிலும் வெற்றிக் கிண்ணங்களை தனதாக்கிக் கொண்டது. மகாஜனா என்றால் உதைப்பந்தாட்டம், உதைப்பந்தாட்டம் என்றால் மகாஜனா என்று கூறும் அளவிற்கு இதன் சாதனை சிகரம் தொட்டது.

கிரிக்கெட், கொக்கி, பெட்பின்ரன், டெனிஸ், கரப்பந்தாட்டம், வலைப்பந்தாட்டம் ஆகியவற்றிலும் தடம் பதிக்க தவறவில்லை. மெய்வல்லுனர் போட்டிகளைப் பொறுத்த வரை கடந்த மூன்று ஆண்டுகளுக்குள் நான்கு தங்கப் பதக்கங்களையும், ஆறு வெள்ளிப் பதக்கங்களையும், இரண்டு வென்கலப் பதக்கங்களையும் பெற்று சாதனை படைத்தது.

இவ்வாறாக நாளாந்தம் பல்வேறு விருதுகளையும், வெற்றிப்பதக்கங்களையும், சான்றிதழ்களையும் பெற்று இலங்கையில் விரல் சுட்டிக் காட்டக்கூடிய பாடசாலைகளில் யாழ் மகாஜனாக் கல்லூரியும் ஒன்று என்பது பெருமைக்குரியதே.

1910 ஆண்டு இற்றைக்கு 100 ஆண்டுகளுக்கு முன்பு யாழ் மாவட்த்தின் தெல்லிப்பளை என்னும் சிற்றூரிலே பாவலர் துரையப்பா பிள்ளை அவர்களால் அவரது சொந்த வீட்டிலே ஒரு சிறு திண்ணைப்பள்ளியாக ஆரம்பிக்கப்பட்டது இக் கல்லூரி.

அரசாங்க உதவிகள் எதுவுமற்ற ஒரு இக்கட்டான நிலையிலும், உறுதி தளராத பாவலர் இரண்டே ஆணடுகளில் கிராம மக்களின் கல்வியை கருத்திற் கொண்டு பச்சைப் பசும் வயல் வெளிகள் சூழ்ந்து இயற்கை அன்னை தாலாட்டும் அம்பனைக் கிராமத்தில் 27 லாச் அளவேயான ஒரு சிறு நிலப்பரப்பில் புதிய பாடசாலையை அவர் நிறுவினார். தொடர்ச்சி 17 ஆம் பக்கத்தை பார்க்க....

16 ஆம் பக்கத் தொடர்ச்சி

மாணவர் தொகை அதிகரிக்கத் தொடங்கியது. இதன் காரணமாக மேலும் ஒரு கட்டடம் ரீ வடிவில் அமைக்கப்பட்டது.

பாடசாலையின் ஆரம்பப்பிரிவு சரஸ்வதி வித்தியாலயமெனப் பெயர் பெற்றது. 19 ஆண்டுகள் வளர்ச்சிப் பாதையில் காலம் ஓடிற்று. 1929ம் ஆண்டு பாவலரை மரணம் தளுவிக் கொண்டது. அவரது கனவுகளை மெய்ப்படுத்த இதோ நான் வருகிறேன் என்ற முன்வந்தார் அவரது உறவினரும் கல்விமானுமாகிய திரு. கா.சின்னப்பா அவர்கள். இவரது அயராத உழைப்பாலும் அற்பணிப்பாலும் மேலும் மேலும் உத்வேகம் கொண்டு வளர்ந்து வந்தது மகாஜனா.

1935ம் ஆண்டு வெள்ளிவிழாக் கண்டது இக் கல்லூரி அந்த காலத்தில் ஆண்களுக்கு நிகராக பெண்களையும் கல்வியில் இணைந்த அதிசயம் இவரது காலத்தில் தான் நடந்தேறியது.

இவரைத் தொடர்ந்து புதிய அதிபராக பதவியேற்றார் கல்லூரியின் தாபகர் துரையப்பா பிள்ளை அவர்களின் மகன் ஜெயரத்தினம் அவர்கள். தந்தையை மிஞ்சிய தனையனாக



துடிப்புடன் இவர் செயற்பட்டார்.
இரண்டு பிரிவுகளாக இயங்கி வந்த பாடசாலை ஒரு குடையின் கீழ் மகாஜனா எனப் பெயர் பெற்றது. இவரது காலத்திலே, கல்லூரியின் இலட்சனை, கல்லூரி கீதம் என்பன இக் காலத்திலேயே உருவாக்கம் பெற்றன.

நட்ட நடுவே மைதானம், சுற்றிவர வகுப்பறைகள், அருகே அழகுக் கொலுவாய் வீற்றிருக்கும் நடேஸ்வரர் ஆலயம், பாடசாலை ஓரத்தே மாணவர் விடுதி, மாணவர் விடுதி மறு கரையில் திறந்த வெளி அரங்கு, முன்புறத்திலே தெரு ஓரமாய் வானளாவி நிமிர்ந்து நிற்கும் துரையப்பா பிள்ளை அவர்களின் நினைவு மண்டபம் இப்படியாக துரித வளர்ச்சி கண்டது மகாஜனா கல்லூரி.

1960இல் பொன்விழா கண்டு அடுத்த ஆண்டே **super grade** ஆக தரம் உயர்த்தப்பட்டது.

மகாஜனாவின் சிப்பி என வர்ணிக்கப்பட்ட திருவாளர் துரையப்பா ஜெயரட்ணம் அவர்கள் 1970இல் ஓய்வு பெறும் வரையிலான காலம் உண்மையிலேயே ஒரு பொற்காலம் ஆகும்.

தொடர்ந்து கல்லூரியின் வளர்ச்சியை நிலை நாட்டும் வகையில் திருவாளர்கள் மா.மகாதேவன், பி.எஸ். குமாரசாமி, க.சிவசுப்பிரமணியம்,
பொ.கனகசபாபதி , பிரம்மஸ்ரீ கு.ச.ரத்தினேஸ்வர ஐயர், பொன்.சோமசுந்தரம், த.சண்முகசுந்தரம், வே.கந்தையா, க. நாகராஜா, பொ. சுந்தரலிங்கம் ஆகியோரும், தற்போது திருமதி சிவமலர் அனந்தசயனர் அவர்களும் அதிபர்களாக கிடைத்தமை மகாஜனா பெற்ற பெரும் பேறு ஆகும்.

இவர்களோடு சக ஆசிரியர்கள், ஊழியர்கள், பெற்றோர், பழைய மாணவர்கள், நலன் விரும்பிகள் ஆகியோர் ஆற்றிய சேவையும் அளப்பரியது.

இயற்கையும், போர்ச் சூழலும் பல்வேறு காலகட்டங்களில் விளைத்த அனர்த்தங்களுக்கு மத்தியிலும், அங்குமிங்கும் நகர்ந்தாலும் மீண்டும் அதே இடத்தில், அதே பழைய கம்பீரத்துடன் மகாஜனா தலைநிமிர்ந்து நிற்கின்றது.



# 2006 ஆம் ஆண்டு திருகோணமலை கடற்கரை பகுதியில் கொல்லப்பட்ட 5 மாணவர்களது 10 ஆவது வருட நினைவு தினம்..!





திருகோணமலையில் கடந்த 2006 ஆம் ஆண்டு கடற்கரை பகுதியில் கொல்லப்பட்ட 5 மாணவர்களது 10ஆவது வருட நினைவு தினம் 02.01.2016 சனிக்கிழமை அனுஷ்டிக்கப்பட்டது.

உட்துறைமுக வீதியில் அமைந்துள்ள மனித உரிமைகள் பாதுகாப்பு நிலையத்தில் குறித்த நினைவு தினம் அனுஷ்டிக்கப்பட்டது.

இந் நிகழ்வில் மனித உரிமை ஆர்வலர்களும் இந்து கத்தோலிக்க மதகுருக்களும் கலந்து கொண்டனர்.

தமிழ் சமூகத்தை பேரதிர்ச்சிக்கு உட்படுத்தும் விதமாக நடாத்தப்பட்ட திருகோணமலை ஐந்து மாணவர் படுகொலை இடம்பெற்று பத்து வருடங்கள் கடந்துள்ளது.

இந்தப் படுகொலை குறித்து ஐக்கிய நாடுகள் சபையிலும் சாட்சியங்கள் அளிக்கப்பட்டுள்ளதுடன் இலங்கையின் போர்க்குற்றம் குறித்த குற்றச்சாட்டுக்கு இப்படுகொலையும் ஆதாரங்களில் ஒன்றாக கருதப்படுகின்றது. 2006 ஜனவரி 2 ஆம் திகதி திருகோணமலை, நிலாவெளி கடற்கரையில் ஐந்து தமிழ் மாணவர்கள் படுகொலை செய்யப்பட்டனர்.

இப்படுகொலைகள் குறித்த அதிகாரபூர்வ விசாரணைகள் தற்போதும் நடைபெற்று வருகின்ற நிலையில், இது குறித்து சிறப்பு அதிரடிப் படையினர் பலர் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டனர்.

இது தொடர்பில் சந்தேகத்தின் அடிப்படையில் உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் ஒருவர், பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் உட்பட 12 விசேட அதிரடிப்படையினர்கள் குற்றப்புலனாய்வுப் பிரிவினரால் 2013 யூலை 5 அன்று கைது செய்யப்பட்டனர்.

மாணவர்கள் மீதான படுகொலைகள் இடம்பெற்று ஒரு தசாப்தத்தை கடந்துள்ளபோதும் இதுவரை குற்றவாளிகள் தண்டிக்கப்படவில்லை என்பது குறிப்பிட்டத்தக்கது.



# இயற்கை மருத்துவம்

## மூன்றே நாளில் தொப்பையை குறைக்க உதவும் அற்புத ஜூஸ்!



**வெள்ளரிக்காய்**

வெள்ளரிக்காயில் நீர்ச்சத்து அதிகம், கலோரிகள் குறைவு, நார்ச்சத்துக்கள் அதிகம் மற்றும் உடலின் அல்கலைன் அளவை சீராக பராமரிக்க உதவும். மேலும் இது வயிற்றில் சேரும் கொழுப்புக்களை கரைக்க மிகவும் சிறப்பான உணவுப் பொருளும் கூட. எலுமிச்சை மற்றும் எலுமிச்சங்காயில் பெக்டின் என்னும் நார்ச்சத்து அதிகம் உள்ளது. இது பசியைக் கட்டுப்படுத்த பெரிதும் உதவும். மேலும் இவை உடலில் சேரும் நச்சுக்களை மட்டுமின்றி, தேவையில்லாத கொழுப்புக்களையும் கரைத்து வெளியேற்றும்.

**புதினா**

புதினா உணவின் வாசனை மற்றும் சுவையை அதிகரிக்க உதவுவதோடு, புத்துணர்ச்சி அளித்து, பசியைக் கட்டுப்படுத்துவதிலும் மிகவும் சிறந்தது. மேலும் புதினா வாய் துர்நாற்றத்தையும் தடுக்கும்.

**இஞ்சி**

கொலம்பியா பல்கலைக்கழகத்தில் உள்ள மனித ஊட்டச்சத்து நிறுவனம் நடத்திய ஆய்வு ஒன்றில் கலந்து கொண்டவர்கள், குடிக்கும் பானங்களில் இஞ்சியை சேர்த்துக் கொண்டு வந்தனர். அப்படி இஞ்சியை சேர்த்ததால், அவர்கள் வயிறு நிறைந்தது போன்று உணர்ந்ததோடு, குறைவான அளவிலேயே உணவை உட்கொண்டனர். இதனால் இஞ்சியானது அதிகப்படியான கலோரிகளை எரித்து, அதிகப்படியான கொழுப்புக்களை கரையச் செய்யும்.

**தண்ணீர்**

தண்ணீர் உடலின் நீர்ச்சத்தை அதிகரிப்பதோடு, உடற்பயிற்சியின் போது தசை மற்றும் மூட்டுகளில் தேய்வு ஏற்படாமல் தடுக்கும். மேலும் நீரை அதிக அளவில் தொடர்ந்து குடித்து வந்தால், அது உணவின் மீதுள்ள நாட்டத்தைக் குறைக்கும்.

**குறிப்பு**

மேற்கூறிய பொருட்களைக் கொண்டு ஜூஸ் தயாரித்து, தினமும் குடித்து வந்தால், 3 நாட்களில் தொப்பை குறைவதை நன்கு காணலாம். அதற்காக மூன்றே நாட்களில் தொப்பை முற்றிலும் குறையாது. தினமும் குடித்து வந்தால், தொப்பை குறைந்து கொண்டே வருவதை காண முடியும்.

ஜூஸ் செய்யும் முறை

1 வெள்ளரிக்காய்
5 எலுமிச்சங்காய்
15 புதினா இலைகள்
2 டேபிள் ஸ்பூன் துருவிய இஞ்சி
2.5 லிட்டர் தண்ணீர்
வெள்ளரிக்காய்

இரண்டு எலுமிச்சையை வட்ட வட்டமாக வெட்டி தனியாக வைத்துக் கொள்ளவும். பின்னர் மீதமுள்ள 3 எலுமிச்சங்காய் ஒரு பாத்திரத்தில் பிழிந்து, அதில் புதினாவை நறுக்கி போட்டு, அதில் 1.5 லிட்டர் நீர் ஊற்றி நன்கு கிளறி விட வேண்டும்.

பின்பு அதில் இஞ்சி, மீதமுள்ள தண்ணீரை ஊற்றி, அத்துடன் வெள்ளரிக்காய், மற்றும் வெட்டி வைக்கப்பட்டிருக்கும் எலுமிச்சங்காயை போட்டு நன்கு கிளறி, 24 மணிநேரம் ஊற வைத்து, பின் குடிக்க வேண்டும். இப்படி 3 நாட்கள் தொடர்ந்து செய்து குடித்து வந்தால், தொப்பை குறைவதைக் காணலாம். வேண்டுமெனில் இந்த செயலை ஒரு வாரம் கழித்து மீண்டும் 3 நாட்கள் தொடர்ந்தால் நல்ல பலன்கள் கிடைக்கும்.

## கருப்பட்டியின் பயன்கள்



சீரகத்தை வறுத்து சுக்குக்கருப்பட்டியுடன் சேர்த்து சாப்பிட்டால், நன்கு பசி எடுக்கும். ஓமத்தை, கருப்பட்டியுடன் சேர்த்துச் சாப்பிட்டால் வாயுத் தொல்லை நீங்கும்.

குப்பைமேனிக் கீரையுடன் கருப்பட்டியைச் சேர்த்து வதக்கிச் சாப்பிட்டால் வறட்டு இருமல், நாள்பட்ட சளித்தொல்லை நீங்கும். ஆண்மையை வீரியப்படுத்துவதிலும் கருப்பட்டிக்கு தனிப்பங்கு உண்டு. காபிக்கு சீனிக்கு பதிலாக கருப்பட்டிப் போட்டுக் குடித்தால் உடலில் சர்க்கரையின் அளவு கட்டுப்பாடாக இருக்கும்.

சர்க்கரை நோயாளி-களும் கூட கருப்பட்டி காபி குடிக்கலாம். இதில் சுண்ணாம்புச் சத்தும், நோய் எதிர்ப்பு சக்தியும் அதி-கமாக இருக்கிறது. சர்க்கரை நோயாளிகள், கைக்குத்தல் அரிசி சாதத்துடன் கருப்பட்டியைக் கலந்து சாப்பிட்டு வந்தால் சர்க்கரையின் அளவு கட்டுப்பாட்டில் இருப்பதுடன், அடிக்கடி சிறுநீர் போவதும் குறையும். கருப்பட்டி பணியாரம் குழந்தைகளுக்கு ஏற்றது. இயற்கை முறைக்கு மாறுவோம், ஆரோக்கியமாக வாழ்வோம்!

## மாரடைப்பு வருவதை தடுக்கும் சோயா பீன்ஸ்..!!

சோயா பீன்ஸில் அதிக அளவில் புரோட்டீன், மிதமான அளவில் கொழுப்பு, நார்ச்சத்து, பி வைட்டமின்கள், ஃபோலிக் அமிலம், பொட்டாஷியம், கால்சியம் மற்றும் இரும்புச் சத்துகள் நிறைந்துள்ளன. அதே போன்று, சோயா பால் தோற்றத்திலும் குணாதிசயத்திலும் பண்ணை பால் போலவே உள்ளது.

பல்வேறு வயதில் உள்ளோருக்கும் தேவையான 9 வகை அமினோ அமிலங்களைக் கொண்டுள்ள புரோட்டீனை வழங்கும் ஒரே தாவர உணவாகும். பால் பானங்களைத் தவிர்க்க விரும்புவோருக்கு மாற்று பானம் சோயா புரோட்டீன் பானம் தான். சோயாவிலுள்ள **PUFA** எனப்படும் **Poly Unsaturated Fatty Acids** இரத்த அழுத்தத்தை ஒழுங்குபடுத்துகிறது.

சோயாவில் கரையும் நார்ச்சத்து உள்ளதால் இரத்தத்திலுள்ள சர்க்கரை அளவைக் கட்டுப்படுத்துகிறது. சோயா உணவு கெட்ட கொலஸ்ட்ரால் என்னும் **LDL (Low Density Lipo proteins)** அளவைக் குறைத்து, நல்ல கொலஸ்ட்ரால் எனப்படும் **HDL (High Density Lipoproteins)** அளவைக் கூட்டுவதன் மூலம் மாரடைப்பைக் குறைக்கிறது. தினசரி சோயா உட்கொள்வதன் மூலம் பல்வேறு வகையான புற்று நோய்களிலிருந்து தற்காத்துக் கொள்ளலாம்.

முக்கியமாக நாள்பட்ட பல்வேறு நோய்களைக் கட்டுப்படுத்துவதில் சோயா பெரும் பங்காற்றுகிறது. சோயா உணவு மாதவிடாய் நின்ற பின் உடலில் ஏற்படும் சங்கடங் களைக் குறைத்து, எலும்புகளின் சீரழிவைத் தடுக்கிறது. சோயா உடல் முதிர்ச்சியைத் தாமதப்படுத்துகிறது. இரும்புச்சத்தும், கல்சியமும் நிறைந்துள்ளதால், இவ்வுணவு கர்ப்பிணிப் பெண்களுக்கும், பாலூட்டும் தாய்மார்களுக்கும் ஏற்றது.

அனைத்துப் பருப்புகளிலும் உள்ள புரதச் சத்தைவிட மும்மடங்கு புரதச்சத்து சோயா வடகத்திலுள்ளது. விளையாட்டு வீரர்களுக்கும் இது மிக அவசியமான ஊட்டச்சத்து உணவு.





# யுத்தத்தின் கோரப்பிடியில் சிக்கி தற்கொலை செய்வதற்கு முயற்சி செய்த முன்னாள் போராளிக்கு 70 ஆயிரம் பெறுமதியில் வாழ்வாதார உதவி..!

மட்டக்களப்பு, பதுளை வீதி, கொடுவாமடு கிராமத்தில் கணவனின் துணையின்றி தனது மூன்று பிள்ளைகளுடன் வாழ்வதற்காக தினம் தினம் போராடும் வேதநாயகம் சாந்தி குடும்பத்துக்கு இலண்டன் நம்பிக்கை ஒளி தன்னார்வ தொண்டு நிறுவனத்தின் இணை நிறுவனமாக தாயகத்தில் இயங்கும் இணைக்கும் இதயங்கள் அறக்கட்டளையினால் கடந்த மாதம் 70 ஆயிரம் ரூபாய் பெறுமதியான வாழ்வாதார உதவி வழங்கி வைக்கப்பட்டது.

கடந்த ஒக்டோபர் மாதம் நம்பிக்கை ஒளி பத்திரிக்கையாளர் மட்டக்களப்பு கொடுவாமடு கிராமத்துக்குச் சென்று வேதநாயகம் சாந்தியிடம் நேர்காணல் ஒன்றை மேற்கொண்டு ஒக்டோபர் மாதம் நம்பிக்கை ஒளி பத்திரிகையில் சாந்தியின் வாழ்க்கை பாதைகளில் அவள் எதிர்கொண்ட சவால்கள், துன்பங்கள் தாங்கிய நேர்காணல் பிரசுரிக்கப்பட்டது.

குறித்த நேர்காணலை படித்து சாந்தி குடும்பத்தின் வறுமையை உணர்ந்த இலண்டன் நம்பிக்கை ஒளி நிர்வாகத்திற்கு அதன் உறுப்பினர்கள் 70 ஆயிரம் இலங்கை ரூபாயை வழங்கி, அதன் மூலம் வேதநாயகம் சாந்திக்கு ஒரு நிலையான வருமானத்தை பெற்றுக் கொள்வதற்காக கறவை மாடு ஒன்று வாங்கி வழங்கப்பட்டது.

இந்த கறவை மாட்டில் பெறப்படும் பாலின் மூலம் கிடைக்கப் பெறும் வருமானத்தில் குடும்பச் செலவையும், பிள்ளைகளின் கல்விச் செலவையும் சமாளித்துக் கொள்ளக்கூடியதாக இருப்பதாகவும் இவ்வளவு தூரத்தில் இருந்து எனது நிலையை அறிந்த இணைக்கும் இதயங்கள் அறக்கட்டளை சேவையாளர்கள் வருகை தந்து முதற்கட்டமாக உணவுக்காகவும், பிள்ளைகளின் கல்விக்காகவும் 10 ஆயிரம் ரூபாய் வழங்கினார்கள். அதனைத் தொடர்ந்து இரண்டு வார காலத்தின் பின் எழுபது ஆயிரம் ரூபாய் பணத்தை வழங்கி கறவை மாடு வாங்குவதற்கு உதவி செய்தார்கள்.

என்னைப் போன்ற பல பெண்கள் யுத்தத்தில் பாதிக்கப்பட்டு கணவனால் கைவிடப்பட்ட நிலையில் அன்றாட உணவுக்கே திண்டாடிக் கொண்டிருக்கின்றார்கள்.

எனக்கு வாழ்வாதாரம் வழங்கியது போல அனைவருக்கும் ஏதோ ஒரு விதத்தில் உதவி செய்யவேண்டும்.

இணைக்கும் இதயங்கள் அறக்கட்டளை யுத்தத்தில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு பல உதவிகளை வழங்கி வருவதாக கேள்விப்பட்டிருக்கின்றேன். எனக்கும் வாழ்வாதார உதவி வழங்கி எனது குடும்பத்திற்கு ஒளியேற்றிய நம்பிக்கை ஒளிக்கு எனது குடும்பம் சார்பான நன்றிகளை தெரிவித்துக் கொள்கின்றேன் எனத் தெரிவித்தார்.













ஊரிழந்து உறவிழந்து வேரறுந்து வாழும் எமது தாயக உறவுகளுக்கு உதவிக்கரம் நீட்டும் நம்பிக்கை ஒளியின் மகத்தான சேவையில் மாதாந்தம் £2 (பவுண்ஸ்களை) செலுத்தி நீங்களும் இணைந்து கொள்ளுமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்கின்றோம்.

Account Name- Ray of hope people , Account Number- 43641341
Sort code 20-92-60. Bank Name- Barclays

**மேலதிக விபரங்களுக்கு அழையுங்கள் 02086179343**


**Ace Accountants & Tax Consultants Ltd**

Accountants for all your business needs!

**Accountants**
*Accounts Preparation for Sole Traders, Partnerships & Limited Companies*

**Business Advisers**
*Help for New and Existing businesses on all their day to day running, Company Formation, Self-employment registration*

**Taxation**
*Self Assessment Tax Returns, Partnership Tax Returns, Company Tax Returns, Capital Gains Tax*

**Payroll Bureau**
*Payslip, Dealing with HMRC filing of P45, P46, P35 & P11d,*
*Dealing with Statutory Maternity Pay.*
*Statutory Sick Pay*
*CIS Contractor Payslips / CIS Monthly Returns*

**Book-keeping and VAT Returns**
*Bookkeeping, VAT Registration, VAT Returns, Management Accounts, Cash-flow forecast*

**Tax & VAT Investigation Defence**
*We specialise in TAX & VAT investigation and defend your position*

**Mortgage & Loans**
*Residential mortgage, Commercial mortgage, Secured Loans*

Do you see accountants as grey lifeless individuals who just report history and tax obligations? Just imagine the difference - Ace Accountants & Tax Consultants are enthusiastic, supportive and encouraging. Providing a full range of accountancy services at affordable fees.

Business clients across London, Essex, Middlesex and Hertfordshire realise that Ace Accountants & Tax Consultants share their ambition for success. Just think of us as a partner. We provide the accountancy and financial management information that drives business success.

Being part of your team we look ahead to the future and jointly, we will develop a business plan for business growth developed through financial success.

In summary - we inspire, motivate and instigate fresh ideas.

ACE ACCOUNTANTS & TAX CONSULTANTS LTD FIRST FLOOR
34 – 36 HIGH STREET, BARKINGSIDE ESSEX IG6 2DQ
TELEPHONE NO: 0208 550 5369 FAX: 0203 014 9556


நம்பிக்கை ஒளி
RAY OF HOPE

நம்பிக்கை ஒளி
Rey of hope

நம்பிக்கை ஒளி
Rey of hope

உங்கள் வாசல் தேடிவர
ஒரு வருடத்துக்கு £25 மட்டுமே.

## SUBSCRIPTION FORM

Name: ..............................................

Address: ..............................................

..............................................

..............................................

post code: ..............................................

Telephone: ..............................................

மேலே உள்ள விண்ணப்ப படிவத்துடன் £25 க்கு 'Ray of hope people" பெயரில் காசோலையையும், G05, Courtenay House, 10 Courtenay Road, East Lane, Business Park, Middlesex, Wembley, HA9 7ND, UK. என்ற முகவரிக்கு அனுப்பிவைக்கவும்.

Email- roh@theroh.org. Tel - 0044-2086179343 Mobile- 07853071088. Wep- www.theroh.org
Face book- Ray of Hope நம்பிக்கை ஒளி. தாயகத்தில் Face book- Connecting Hearts Foundation இணைக்கும் இதயங்கள் அறக்கட்டளை

G05, Courtenay House, 10 Courtenay Road, East Lane, Business Park, Middlesex, Wembley, HA9 7ND, UK.

துவண்டோர் துயர் துடைத்து ஒளி ஏற்றுவோம்